வார மலர்

மின்னிதழ்

# தேசியம்

www.thesiyamnews.com

THESIYAM ද්සියම්



நீங்களும் செய்தியாளர் ஆகலாம்

செய்திகள், சம்பவங்கள், நிகழ்வுகளை எமக்கு அனுப்பி வையுங்கள்

thesiyamnews@gmail.com



குரல்: 04 | பங்குனி மாதம் 12.04.2023 புதன்கிழமை | பக்கங்கள்: 10


## உத்தேச பயங்கரவாத எதிர்ப்புச் சட்டம்

# பயங்கரவாதத் தடைச் சட்டத்தை விட கோடியது

**100 அமைப்புகள் கூட்டாக எச்சரிக்கை**

உத்தேச பயங்கரவாத எதிர்ப்புச் சட்டம் கொடிய பயங்கரவாதத் தடைச் சட்டத்தை விட மிக மோசமானது. இச்சட்டம் ஜனநாயகத்துக்கு கடும் அச்சுறுத்தலாக அமையும் என இலங்கையிலுள்ள 100 அமைப்புகள் கூட்டாக எச்சரித்துள்ளன.

அட்டூழியமிக்க இந்த உத்தேச சட்டத்தை வாபஸ் பெற்று பயங்கரவாதத்தடைச்சட்டத்தை உடனடியாக நீக்குமாறு நாம் அரசாங்கத்தைக் கோருகின்றோம். இந்த முயற்சியில் சர்வதேச சமூகமும் உதவ வேண்டும்

பக்கம் 02

## 13 ஆவது அரசியலமைப்பு திருத்தம் இராஜதந்திரிகளுக்கு அரசாங்கம் விளக்கம்

அரசாங்கத்தினால் முன்மொழியப்பட்டுள்ள புதிய பயங்கரவாத எதிர்ப்பு சட்ட மூலம் குறித்த நிலைப்பாடு மற்றும் 13ஆவது அரசியலமைப்பு திருத்தம் தொடர்பில் வெளிநாட்டு இராஜதந்திரிகளுக்கு அரசாங்கம் விளக்கமளித்துள்ளது.

உண்மை மற்றும் நல்லிணக்க பொறிமுறையை ஸ்தாபித்தல் உட்பட நல்லிணக்கத்திற்காக அரசாங்கம் முன்னெடுத்துள்ள முயற்சிகள் குறித்தும் விளக்கமளிக்கப்பட்டுள்ளது.

கொழும்பை தளமாகக் கொண்ட இராஜதந்திரிகளுடன் 10 ஆம் திகதி திங்கட்கிழமை இடம்பெற்ற சந்திப்பின் போது வெளிநாட்டலுவல்கள் அமைச்சர் அலி சப்ரி , இராஜாங்க அமைச்சர் தாரக பாலசூரிய, தேசிய பாதுகாப்பு தொடர்பான

பக்கம் 02

## எல்லை நிர்ணயம் குறித்த ஆரம்ப வரைபு பிரதமரிடம் கையளிப்பு

உள்ளூராட்சி மன்றங்களுக்கான எல்லை நிர்ணயம் தொடர்பான தேசிய குழுவின் அறிக்கையின் ஆரம்ப வரைபு பிரதமர் தினேஷ் குணவர்தனவிடம் எல்லை நிர்ணய குழுவின் தலைவர் மஹிந்த தேசப்பிரிவினால் நேற்று செவ்வாய்கிழமை கையளிக்கப்பட்டுள்ளது.

இந்த ஆரம்ப வரைபில் பிரதேச எல்லைகள் மற்றும் மக்கள் தொகை குறித்த புதிய எல்லை குறிப்பிடப்பட்டுள்ளதுடன், குறித்த வரைவு எதிர் காலத்தில் மாவட்ட செயலாளர்கள் மற்றும் அரசியல் கட்சி செயலாளர்களுக்கு அனுப்பி

பக்கம் 02

### சண்டிலிப்பாய் சீரணி நாகம்மாள் ஆலயத்தின்

## வருடாந்த திருவிழா நடாத்துமாறு கோரி கவனயீர்ப்பு!



சண்டிலிப்பாய் சீரணி நாகபூசணி அம்மன் ஆலயத்தின் வருடாந்த திருவிவாவினை நடாத்துமாறு கோரி இன்றையதினம்(12) பக்தர்களால் கவனயீர்ப்பு ஆர்ப்பாட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட்டது.

இந்த போராட்டத்தை முன்னெடுத்த பக்தர்கள் கருத்து தெரிவிக்கையில்,

தனிப்பட்ட காரணத்துக்காக ஒரு சிலர் இந்த ஆலயத்தின் திருவிழாவினை தடுக்கிறார்கள்.

இது தொடர்பாக நீதிமன்றத்தில் வழக்கும் உள்ளது. நீதிமன்ற வழக்கானது எதிர்வரும் 24ஆம் திகதி நடைபெற உள்ளது. ஆனால் கொடியேற்றமானது பதினெட்டாம் திகதி

பக்கம் 02

## அடாவடி செய்யும் மதப்பிரிவே வெளியேறு

**யாழில் மதஸ்தலத்தை அகற்றக்கோரி போராட்டம் பொலிஸாருக்கும் போராட்டக்காரர்களுக்குமிடையில் முறுகல்**

அரசிற்கு சொந்தமான அச்சுவேலி நெசவு சாலையை அத்துமீறி கைப்பற்றி அடாவடித்தனம் புரியும் மதப்பிரிவினரை வெளியேற்றுமாறு கோரி போராட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட்டது.

அச்சுவேலி நெசவு சாலை முன்றலில் நேற்று செவ்வாய்க்கிழமை காலை 8 மணியளவில் சிவசேனை அமைப்பின் ஏற்பாட்டில் இப் போராட்டம் நடைபெற்றது.

இந்நிலையில் அச்சுவேலியில் போராட்டத்தில் ஈடுபட்டு வருபவர்கள் வீதியோரத்தில் பந்தல் அமைத்து தொடர்ந்து போராட தயாரான போது அதற்கு அச்சுவேலி காவல்தறையினர் அனுமதி மறுத்தமையால் அங்கு குழப்ப நிலை தோன்றியது.

பக்கம் 02

## யாழ் பல்கலையில் அன்னை பூபதியின் 35 ஆம் ஆண்டு நினைவேந்தல் அனுஸ்டிப்பு!





பக்கம் 02

# அமெரிக்க கப்பலில் ஏறி தப்பிச்செல்ல முயன்ற 4 தமிழ் இளைஞர்கள் சி.ஐ.டி.யினரிடம் ஒப்படைப்பு

கொழும்பு துறைமுகத்தில் நங்கூரமிட்டு நிறுத்தப்பட்டிருந்த அமெரிக்கக் கப்பலில் சட்டவிரோதமாக ஏறியிருந்த நிலையில் கைது செய்யப்பட்ட 4 இளைஞர்களும், மேலதிக விசாரணைகளுக்காக குடிவரவு, குடியகல்வு திணைக்களத்தினால் குற்றப் புலனாய்வுப் திணைக்களத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளனர்.

யாழ்ப்பாணம் மற்றும் முல்லைத்தீவு பகுதிகளைச் சேர்ந்த 25 வயது முதல் 32 வயதுக்கு இடைப்பட்ட நான்கு இளைஞர்களே இவ்வாறு கைது செய்யப்பட்டனர்.

குறித்த கப்பல் கடந்த மாதம் 24ஆம் திகதி கொழும்பு துறைமுகத்தை வந்தடைந்ததுடன் அது மறுநாள் ஐரோப்பா நோக்கி பயணத்தை ஆரம்பித்திருந்தது.

பின்னர், சுயஸ் கால்வாயில் நுழையும் போது, கப்பலில் பணியாளர்கள் முன்னர் அறிந்திராத நான்கு பேர் இருப்பதை கண்டு, தங்களது நிறுவனத்திற்கு தகவல் தெரிவித்துள்ளனர்.

இதனையடுத்து கடந்த மாதம் 28ஆம் திகதி குறித்த இளைஞர்களின் அடையாள அட்டைகளை பரிசோதித்தபோது அவர்கள் இலங்கையர்கள் என கப்பலின் பணிக்குழாமினர் உறுதிப்படுத்தி இலங்கைக்கு அருகில் பயணிக்கவிருந்த மற்றுமொரு கப்பலிடம் அவர்களை ஒப்படைத்தனர்.

பின்னர் நேற்று முன்தினம் குடிவரவு, குடியகல்வு திணைக்கள அதிகாரிகள் வழங்கிய அறிவித்தலின்படி, கடற்படை, காவல்துறை மற்றும் துறைமுகங்கள் அதிகாரசபை ஆகியவற்றின் அதிகாரிகள் குழுவொன்று விசேட படகொன்றில் குறித்த கப்பலுக்கு சென்று அவர்களை கைது செய்துள்ளனர்.

கைது செய்யப்பட்ட நால்வரில் ஒருவர் திருமணமானவர் என்றும், கொழும்பு துறைமுகத்தில் பொறியியல் சேவைகளை வழங்கும் நிறுவனம் ஒன்றின் பெயரில் துறைமுகத்துக்குள் அவர்கள் நுழைவதற்கான அனுமதிப்பத்திரங்களை எடுத்துள்ளதாகவும் விசாரணையில் தெரியவந்துள்ளது.

## அடாவடி செய்யும் மதப்பிரிவே வெளியேறு

இதன்போது போராட்டகாரர்கள் பந்தல் அமைத்து போராட்டத்தில் ஈடுபட முற்பட்டபோது அங்கு வருகைதந்த அச்சுவேலி காவல்துறையினர் அவ்வாறு செய்ய முடியாதென தெரிவித்ததுடன் போராட்டத்தில் ஈடுபட்டவர்களின் விபரங்களை சேகரித்துள்ளனர்.

குறித்த நெசவு சாலை யுத்தத்தின் பின் இயங்கவில்லை என தெரிவிக்கப்படுகிறது.அதன் பின்னர் குறித்த கட்டிடத்தில் ஒரு மதஸ்தலம் ஒன்று அமைக்கப்பட்டு பிரார்த்தனை வழிபாடுகள் முன்னெடுக்கப்பட்டு வந்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

குறித்த மதஸ்தலத்தினால் சுற்றுசூழலில் அதிகளவு சத்தத்தோடு பிரார்த்தனை வழிபாடுகள் மேற்கொள்ளப்படுவதாகவும், இதன் காரணமாக மாணவர்கள் மற்றும் நோயாளிகள் பல்வேறு உளவியல் ரீதியான பிரச்சினைகளுக்கு உள்ளாகுவதாக தெரிவிக்கப்படுகிறது.

இம்மதஸ்தலத்திற்கு எதிராக மல்லாகம் நீதிமன்றில் வழக்கொன்றும் தாக்கல் செய்யப்பட்டு இடம்பெற்று வருகிறது.

இந்நிலையில் குறித்த மதப்பிரிவின் போதகர் உட்பட மூவர் கடந்த வெள்ளிக்கிழமை வீடொன்றுக்குள் புகுந்து அங்கிருந்த பெண்களைத் தாக்கி அச்சுறுத்தியமை தொடர்பில் அச்சுவேலிப் காவல்தறையினரால் கைது செய்யப்பட்டு, நீதிமன்றில் முற்படுத்தப்பட்டுப் பிணையில் செல்ல அனுமதிக்கப்பட்டிருந்தனர்.

இந்நிலையில் தற்போது குறித்த மதஸ்தலம் அமைந்துள்ள நெசவுசாலையினை மீளவும் கைத்தொழில் அமைச்சு பொறுப்பெடுத்து நடத்த வேண்டும் என்றும், சுற்றுச்சூழலில் இடம்பெறும் ஒலி மாசடைதலை கட்டுப்படுத்துவதற்காவும் அமைந்துள்ள மதஸ்தலம் அகற்றப்பட வேண்டும் கோரி ஆர்ப்பாட்டம் இடம்பெற்று வருகின்றது.

இதனால் அப்பகுதியில் காவல்துறையினர் குவிக்கப்பட்டு பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது.

அடாவடி செய்யும் மதப்பிரிவே வெளியேறு, ஊடகங்களை அச்சுறுத்தாதே, இளைஞர்களின் தொழில் வாய்ப்பை பறிக்காதே, பொதுமக்கள் சொத்தில் மதம் வளர்க்காதே போன்ற பதாகைகள் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளவர்கள் தங்கியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## எல்லை நிர்ணயம் குறித்த ஆரம்ப

வைக்கப்படவுள்ளதாக பிரதமர் அலுவலகம் தெரிவித்துள்ளது.

இந்த அறிக்கையில் உள்ளடக்குவதற்கான முன்மொழிவுகளை மதத் தலைவர்கள் மற்றும் பல்வேறு அமைப்புக்கள் ஏற்கனவே சமர்ப்பித்துள்ளன.

முழுமையான அறிக்கையைத் தயாரிப்பதற்கு ஏப்ரல் 30ஆம் திகதி வரை கால அவகாசம் வழங்கப்பட்டுள்ளதால், அது வரையில் கிடைக்கப்பெற்ற முன்மொழிவுகள் பரிசீலிக்கப்படும் என குழுவின் தலைவர் மஹிந்த தேசப்பிரிய குறிப்பிட்டுள்ளார்.

இந்நிகழ்வில் பொது நிர்வாக அமைச்சின் செயலாளர் , எல்லை நிர்ணய குழுவின் ஏனைய உறுப்பினர்களான ஜயலத் ரவி திஸாநாயக்க , டபிள்யு.டீ.என். எம்.ஆர்.அதிகாரி, கே.தவலிங்கம் மற்றும் ஐ.ஏ.ஹமீட் உள்ளிட்டோர் கலந்து கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

## இலங்கையின் மூத்த ஊடகவியலாளர் காலமானார்!



இலங்கையின் மூத்த ஊடகவியலாளரும் ரொய்ட்டர்ஸ், BBC, வீரகேசரியின் ஊடகவியலாளருமான பொன்னையா மாணிக்கவாசகம் காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியை வவுனியா வைரவபுளியங்குளம் 10 ஆம் ஒழுங்கையின் உள்ள அவரது இல்லத்தில் நாளை (13) 7 மணிக்கு நடைபெறும் என உறவினர்கள் அறிவித்துள்ளனர்.

## யாழ் பல்கலையில் அன்னை பூபதியின்

இந்தியப் படைகளால் தமிழர் தாயகத்தில் வலிந்து திணிக்கப்பட்ட போரையும் அடாவடிகளையும் நிறுத்த வலியுறுத்தி மட்டக்களப்பு மண்ணில் உண்ணாவிரத அறப்போர் புரிந்து காந்தி தேசத்திற்கே அகிம்சையைப் போதித்து தன்னுயிர் நீத்த அன்னை பூபதியின், உண்ணாவிரத அறப்போராட்டத்தின் 35ஆம் ஆண்டு நினைவேந்தல் இன்று (12.04.2023) புதன்கிழமை, பல்கலை மாணவர்களால் உணர்வுபூர்வமாக நினைவேந்தப்பட்டது.

யாழ் பல்கலை மாணவர் ஒன்றியத்தின் ஒருங்கிணைப்பில் இடம்பெற்ற நினைவேந்தலில், பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத் தலைவர் அழகராசா விஜயகுமார், கலைப்பீட மாணவர் ஒன்றியத் தலைவர் சி.ஜெல்சின், விஞ்ஞான பீட மாணவர் ஒன்றியத் தலைவர் அபிரக்சன், மற்றும் பல்கலைக்கழக கல்விசாரா ஊழியர் சங்கத் தலைவர் த.சிவரூபன் உள்ளிட்டோரின் பங்கேற்புடன் மாணவர்கள், பேராசிரியர்கள், விரிவுரையாளர்கள், கல்விசாரா ஊழியர்கள் ஆகியோரால் நினைவேந்தப்பட்டது.

உலகம் பெண்ணியம் பேசிக்கொண்டிருந்த காலத்தில் பெண்ணியத்தை விஞ்சிய சக்தியைக் காட்டிய அன்னை பூபதியின் நினைவேந்தல் 35ஆம் ஆண்டு நினைவேந்தல் தமிழர் தாயகம் எங்கும் இவ்வருடம் நினைவேந்தப்பட்டுக் கொண்டிருக்கின்றமை குறிப்பிடத்தக்கது.

## சண்டிலிப்பாய் சீரணி நாகம்மாள் ஆலயத்தின்

நடைபெற வேண்டும்.

ஆலயம் என்பது அனைத்து மக்களையும் ஒன்றிணைத்து ஒற்றுமையாக செயல்பட வைக்கும் ஒரு புனிதமான இடம். ஆலயத்தின் திருவிழாக்கள் மூலம் தான் சமூகத்தின் ஒற்றுமை மேலோங்கும்.

பல வரலாற்று இந்தப் அம்சங்களை கொண்ட இந்த கோவிலுக்கு நாட்டின் பல பாகங்களிலும் இருந்தும் பக்தர்கள் வருகை தருகின்றனர். அத்துடன் இந்த திருவிழாவில் கலந்து கொள்வதற்காக புலம்பெயர் தேசத்தில் இருந்தும் பலர் வருகை தருவது வழமை.

இந்நிலையில் இந்த திருவிழாவினை நிறுத்துவதால் பலர் பாதிக்கப்படுகின்றனர். ஆலயத்தின் திருவிழா சரியான நாட்களில் ஒழுங்காக நடைபெறாமல் விட்டால் அது அந்த கோவிலைச் சார்ந்த அனைத்து பக்தர்களுக்கும் ஒரு தீங்காகவே காணப்படும். அதனால் பாதிப்புகளும் ஏற்படும்.

எனவே இந்த திருவிழாவினை வழமை போல் நடாத்துவதற்கு சம்பந்தப்பட்ட அனைத்து தரப்பினரும் பங்களிக்க வேண்டும் என்றனர்.

இந்த போராட்டத்தில் சைவ மதகுருக்கள், உள்நாட்டு, வெளிநாட்டு உறவுகள் என பலரும் கலந்துகொண்டனர்.

## உத்தேச பயங்கரவாத எதிர்ப்புச் சட்டம்

எனவும் அந்த அமைப்புகள் கோரிக்கை விடுத்துள்ளன.

மனித உரிமைச் செயற்பாட்டாளர்கள், சிவில் சமூக பிரதிநிதிகள், கல்வியாளர்கள், ஊடகவியலாளர்கள், தொழிற்சங்கங்களின் பிரதிநிதிகள் கையெழுத்திட்ட இது தொடர்பான கடிதம் கொழும்பிலுள்ள ராஜதந்திர பணியகங்களுக்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

அதில் வலியுறுத்தப்பட்டுள்ளதாவது,

உத்தேச பயங்கரவாத எதிர்ப்புச் சட்டத்தில் 'பயங்கரவாதம்' என்பதன் வரைவிலக்கணம் சர்வதேச வழிகாட்டல்களுக்கு இயைபுறாதததாக இருப்பதுடன் சாதாரணக் குற்றச்செயல்கள் மீது பரந்த உள்ளடக்கத்தினைக் கொண்டுள்ளது.

எனவே, 2023 மார்ச் 17 அன்று வர்த்தமானியில் வெளியிடப்பட்ட உத்தேச பயங்கரவாதத்திற்கு எதிரான சட்டத்தினை உடனடியாக வாபஸ் பெற வேண்டும்.

பயங்கரவாதத் தடைச் சட்டத்தினைப் பயன்படுத்துவது மீதான உடனடியான காலந்தாழ்த்தல் சட்ட இசைவுக்குக் கடப்பாடு கொண்டு அதனை நீக்குவதற்கான துரிதமான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்.

பயங்கரவாதத்தினை எதிர்ப்பதற்கான பரிபூரணமான சட்டவாக்கத்தினைக் கொண்டிருப்பதற்கான சர்வதேசக் கடப்பாடுகளுடனான இலங்கையின் இயைபுறலின் ஓரங்கமாக, தண்டனைச் சட்டக் கோவையில் பயங்கரவாதம் தொடர்பான தவறுகள் உள்ளடங்கலாக, இலங்கையில் பயங்கரவாதத்துடன் தொடர்புடைய சட்டவாக்கத்தின் விரிவான வரிசையினைப் பரிசீலிக்க வேண்டும்.

அறிமுகப்படுத்தப்பட வேண்டியுள்ள அரசிற்கு எதிரான குறிப்பிட்ட ஏதாவது தவறுகளை அடையாளம் காண்பதற்காக, பயங்கரவாதத்தினை எதிர்ப்பதற்காகத் தற்போது அமுலில் இருக்கும் சட்டச்சட்டகங்களை மீளாய்வு செய்ய வேண்டும்

தண்டனைச் சட்டக் கோவையில் சேர்க்கப்படுவதற்காக, குற்றவியல் நடவடிக்கைமுறைக் கோவையில் உள்ள பாதுகாப்புக்களுக்கு உட்பட்டுள்ள நன்கு வரையறுக்கப்பட்ட தவறுகளை வரைதல்; மற்றும் குற்றவியல் சந்தேகநபர்களுக்கு வழங்கப்பட்டுள்ள சாதாரண பாதுகாப்புக்களில் இருந்தான எவ்விதமான விலகலையும் விகிதாசாரமானதாக ஆக்கி, அதனை நியாயப்படுத்தி, அதனை இயற்றுவதற்கு முன்னர் பொது மக்கள் கலந்தாலோசிப்புக்காக வெளியிட வேண்டும் -என்றுள்ளது.

## 13 ஆவது அரசியலமைப்பு திருத்தம் இராஜதந்திரிகளுக்கு அரசாங்கம் விளக்கம்

ஜனாதிபதியின் ஆலோசகர் சாகல ரத்நாயக்க ஆகியோரால் இவ்விடயங்கள் தொடர்பில் விளக்கமளிக்கப்பட்டுள்ளது.

இதன் போது உரையாற்றிய அமைச்சர் அலி சப்ரி, பொருளாதார மீட்சிக்காக இலங்கைக்கு வழங்கிய ஆதரவிற்கு சர்வதேச சமூகத்திற்கு நன்றி தெரிவித்ததோடு, இது தொடர்பான முன்னேற்றம் குறித்தும் விளக்கினார்.

சுற்றுலாப் பயணிகளின் வருகையை மேலும் ஊக்குவிக்கும் வகையில், நாடுகளின் பயண ஆலோசனைகளை மறுபரிசீலனை செய்யுமாறும் அவர் இதன் போது கேட்டுக் கொண்டார்.

கடந்த ஆண்டு டிசம்பரிலும், இவ்வாண்டு ஜனவரியிலும் ஜனாதிபதியால் சர்வகட்சி மாநாட்டை கூட்டுவதற்கும் , ஜனாதிபதி தலைமையில் நல்லிணக்கத்திற்கான அமைச்சரவை உபகுழுவை நியமிப்பது உள்ளிட்ட நல்லிணக்கத்திற்காக அரசாங்கம் முன்னெடுத்துள்ள முயற்சிகள் குறித்தும் அமைச்சர் இதன் போது விளக்கமளித்தார்.

13ஆவது அரசியலமைப்பு திருத்தம் மற்றும் முன்மொழியப்பட்டுள்ள பயங்கரவாத எதிர்ப்பு சட்ட மூலம் தொடர்பான அரசாங்கத்தின் நிலைப்பாடு குறித்தும் அமைச்சர் விளக்கினார்.

உண்மை மற்றும் நல்லிணக்க பொறிமுறையை அமைப்பதற்கான தற்போதைய முயற்சிகள் குறித்த புதுப்பிப்பை அவர் இராஜ தந்திரிகளுக்கு வழங்கினார். மேலும் நாட்டின் உண்மை மற்றும் நல்லிணக்க ஆணைக்குழு குறித்த அனுபவப் பகிர்வுகளைப் பெற்றுக் கொள்வதற்காக தென்னாபிரிக்காவிற்கு உத்தியோகபூர்வ விஜயத்தினை மேற்கொண்டிருந்த போது அது குறித்த நடைமுறைகளை எளிதாக்கியமைக்கும் அந்நாட்டு அரசாங்கத்திற்கு அமைச்சர் இதன் போது நன்றி தெரிவித்தார்.

சர்வதேச நாணய நிதியம், உலக வங்கி மற்றும் ஆசிய அபிவிருத்தி ஆகியவற்றின் திட்டங்களின் பின்னணியில் அரசாங்கத்தின் கட்டமைப்பு சீர்திருத்த செயல்முறைகள் தொடர்பான முன்னேற்றங்கள் குறித்து ஜனாதிபதி அலுவலகப் பிரதானி சாகல ரத்நாயக்க விளக்கமளித்தார்.

மேலும் , நல்லாட்சி, ஊழலை ஒழித்தல், கடன் நிலைத்தன்மை, நிதி முகாமைத்துவம், மிகவும் பாதிக்கப்படக்கூடிய பிரிவுகளுக்கான சமூக பாதுகாப்பு ஆகியவை குறித்து எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் தொடர்பிலும் அவர் தெளிவுபடுத்தினார். அண்மையில் நிறுவப்பட்ட வெளிநாடுகளிலுள்ள இலங்கையர் விவகாரங்களுக்கான அலுவலகம் உள்ளிட்டவை குறித்த அரசாங்கத்தின் முன்முயற்சிகளை வெளிவிவகார செயலாளர் சுட்டிக்காட்டினார்.

இவ் விளக்கமளிப்புக்களைத் தொடர்ந்து இராஜதந்திரிகள் முதலீட்டு ஊக்குவிப்பு, நல்லிணக்கம், நல்லாட்சி மற்றும் ஊழலுக்கு எதிரான பல விடயங்கள் குறித்து கலந்துரையாடினர்.

வெளிவிவகார இராஜாங்க அமைச்சர் தாரக பாலசூரிய, ஜனாதிபதி அலுவலகப் பிரதானி சாகல ரத்நாயக்க மற்றும் வெளிவிவகார அமைச்சின் செயலாளர் அருணி விஜேவர்தன ஆகியோரும் இந்த சந்திப்பில் கலந்து கொண்டிருந்தனர்.

தேசியம்
www.thesiyamnews.com
THESIYAM දේසියම්
ஆசிரியர் பீடம்

இல.527, கே.கே.எஸ். வீதி,
யாழ்ப்பாணம்.
தொலைபேசி : +94 76 567 3339
மின்னஞ்சல் : thesiyamnews@gmail.com
இணையம் : www.thesiyamnews.com

# பயங்கரவாத எதிர்ப்பு சட்டமும்

## தமிழ் மக்கள் முன் உள்ள சவாலும்

தமிழ் மக்களை இலக்காக கொண்டு 43 வருடங்களுக்கு முன்னர் கொண்டுவரப்பட்டிருந்த பயங்கரவாத தடை சட்டம்,பல தசாப்த காலமாக தமிழர்களை நசுக்குவதில் மிகப்பெரும் ஆயுதமாக சிங்கள அரசுகளால் பாவிக்கப்பட்டு வந்த நிலையில், அந்த சட்டம் முழுமையாக இரத்துச் செய்யப்பட்டு அதற்கு பதிலாக புதிய பயங்கரவாத எதிர்ப்புச்சட்ட மூலமொன்றினை நிறைவேற்றிக் கொள்ள அரசாங்கம் மும்முரமாக செயலில் இறங்கியுள்ளது.இதற்கு தென்னிலங்கையிலிருந்தும் கடும் எதிர்ப்புகள் கிளம்பு ஆரம்பித்திருக்கின்றன.முன்மொழியப்பட்டுள்ள பயங்கரவாத சட்டமூலத்தின் மூலம் ஜனாதிபதி பெற்றுக் கொள்ளும் அதிகாரங்களின் விரிவாக்கம் 1978 ஆம் ஆண்டின் அரசியலமைப்பு மற்றும் அதன் விதிகளின் செயற்பாட்டை தானாகவே முடிவுக்கு கொண்டுவரும்.அத்துடன்,'பயங்கரவாத எதிர்ப்பு என்ற ஒரே குடையின் கீழ் கொண்டுவரப்பட்டுள்ள பல விடயங்களை ஜனாதிபதியே கையாள்வார். தேர்தலை நடத்துவது அல்லது நடத்தாமல் இருப்பது அமைதியான போராட்டங்களை நடத்துவதற்கான உரிமை,அமைதியாக ஒன்றுகூடும் உரிமை, பத்திரிகை சுதந்திரம், சட்டவிரோத கைது, சட்டவிரோதமாக தடுப்புக் காவலில் வைப்பது போன்ற விட யங்களில் இச்சட்ட மூலம் அமுலுக்கு வந்தால் தனி நபர் சுதந் திரம் இழக்கப்படும். இவ்விடயங்கள் தொடர்பான பாராளு மன்றத்தின் அனைத்து மேற்பார்வை செயற்பாடுகளும் ஜனா திபதியால் நேரடியாகக் கட்டுப்படுத்தப்படும்.

பயங்கரவாத தடை சட்டம் என்பது தமிழ் மக்களை இலக்காக கொண்டு கடந்த 43 வருடங்களாக தமிழ் மக்களை சிதைத்து சின்னாபின்னமாக்கியது தமிழரின் இருண்ட யுகமாகும். இந்த சட்டத்தை வைத்துக்கொண்டு யுத்த காலத்தில் பால்,வயது என எந்த வேறுபாடுகளுமின்றி பலர் கைது செய்யப்பட்டு அடைக்கப்பட்டனர்.பலர் காணாமலாக்கப்பட்டனர்.பலர் சிறைகளுக்குள்ளேயே பலியாக்கப்பட்டார்கள்–பலருக்கு என்ன நடந்தது என்று கூட தெரியாத மர்மம் இன்று நீடித்துக்கொண்டிருக்கிறது. இவ்வாறு தமிழர்களுக்கென்றே கொண்டுவரப்பட்டிருந்த பயங்கரவாத தடை சட்டம் தொடர்பில் சிங்கள அரசியல்வாதிகளும் சிங்கள மக்களும் என்றுமே அலட்டிக்கொண்டதில்லை.காரணம் அந்த சட்டம் தமிழர்களுக்கானது என்ற காரணத்தினால்.ஆனால் இன்று ரணில் அரசு கொண்டுவரவிருக்கும் பயங்கரவாத எதிர்ப்பு சட்டம் இனம்,மதம், மொழிகளை கடந்து அரசாங்கத்திற்கு எதிராக செயற்படுகின்ற எவர் மீதும் நடவடிக்கையினை எடுக்க முன்மொழிவதுடன்,ஏற்கனவே தமிழர் தேசத்தில் தன்னிச்சையாக செயற்படும் இராணுவம், பொலிஸார்,கடற்படையினருக்கு இந்த புதிய சட்டம் மேலும் மேலும் அதிகாரங்களை வழங்குவதாகவே அமைந்திருக்கிறது.

இதுவரை காலமும் பயங்கரவாத தடை சட்டம் நியாயமான முறையிலோ அல்லது உண்மையான குற்றவாளிகளை தண்டிப்பதிலோ பயன்பட்டிருக்கவில்லை.மாறாக தென்னிலங்கைக்கு விரும்பாதவர்களே இந்த சட்டத்தின் மூலம் தண்டிக்கப்பட்டுள்ளார்கள்.இந்நிலையில் புதிய சட்டத்தின் ஊடாக மனித உரிமைகளை மீறுவதற்கு, அதிகாரிகளுக்கு சந்தர்ப்பம் ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டிருக்கும் நிலையில்,தமிழர் தேசத்தில் தற்சமயம் அரங்கேறும் நில அபகரிப்புகள்,கலாசார,பண்பாட்டு அத்துமீறல்களுக்கு இந்த சட்டம் மென்மேலும் தென்னிலங்கை இனவாதிகளுக்கு பயனுள்ளதாக அமைவதுடன்,இவற்றுக்கு எதிராக போராட்டங்கள் நடைபெற்றால் போராட்டக்காரர்களை இந்த புதிய சட்டத்தின் மூலம் அச்சுறுத்துவதற்கு வாய்ப்பு இருக்கிறது.

அந்த அடிப்படையில் முன்னைய சட்டத்தை விட கொடிய சட்டமாக பார்க்கப்படும் புதிய சட்டமூலத்தை மறுசீரமைப்பிற்கு உட்படுத்தும் வரையில், ஐக்கிய நாடுகள் சபை , ஐரோப்பிய ஒன்றியம் , ஜப்பான், இந்தியா உள்ளிட்ட சர்வதேச நாடுகள் அழுத்தம் கொடுக்க வேண்டும் என மனித உரிமைகள் கண்காணிப்பகம் வலியுறுத்தியுள்ளது. அதேபோல்,புதிய பயங்கரவாத எதிர்ப்பு சட்டம் சர்வதேச தராதங்களை பூர்த்தி செய்வதாக காணப்படவேண்டும் என இலங்கைக்கான அமெரிக்க தூதுவர் ஜூலி சங் தெரிவித்துள்ளார்.மேலும்,பயங்கரவாத தடை சட்டமூலத்தை அனைவரும் ஒன்று திரண்டு தோற்கடித்தே ஆக வேண்டும் என தமிழ் தமிழரசுக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ. சுமந்திரன் தெரிவித்திருக்கிறார்.ஏற்கனவே மிக மோசமான நிலையை எதிர்கொண்டுவரும் நாடு,இந்த சட்டத்தை கொண்டுவருவதன் மூலம் சர்வதேச அளவில் மிகப்பெரும் அபகீர்த்திக்கு உள்ளாகப் போவது உறுதி.அதைவிட இந்த நாட்டில் வாழ்கின்ற மக்களுடைய சுதந்திர செயற்பாடுகள் முழுமையாக பறிக்கப்படுவதுடன்,சட்டமாக நிறைவேற்றப்பட்டால் பல்வேறு அடக்குமுறைகளுக்கு ஊடக நிறுவனங்கள், தொழிற்சங்கங்கள் சுயாதீன அமைப்புக்கள் என அரசாங்கத்துக்கு எதிராக குரல் கொடுக்கும் அனைவரும் கைது செய்யப்படுவார்கள்.எனவே இதனை தடுத்து நிறுத்தும் பொறுப்பு தமிழ் மக்களுக்கும் இருக்கிறது.ஏனெனில் இவ்வாறான சட்டங்களால் அதிகம் அதிகம் பாதிக்கப்பட்டவர்கள் தமிழர்களே. ஆகவே அதனுடைய வலிகளை உணர்ந்தவர்களும் தமிழர்களாகவே இருக்கமுடியும்.எனவே ஒட்டுமொத்த தமிழர்களும் இதற்கு எதிராக குரல் கொடுப்பது காலத்தின் கட்டாயமாகும்.

# யாழில் நீர் பிரச்சினைக்கு காரணம்

# கட்டுப்பாடற்ற விவசாயமே

அண்மைக் காலத்தில் யாழப்பாணத்து மக்களுடைய குடிநீர்ப் பிரச்சினை பற்றிப் பல்வேறு கருத்துக்கள் வெளிவந்த வண்ணம் உள்ளன. யாழ்ப்பாணத்தில் நிலத்தடி நீர் பல்வேறு காரணிகளால் குடிநீர் பயன்பாட்டிற்கு உகந்ததற்றதாகி வருகின்றது. யாழ்ப்பாணத்தில் நிலத்தடி நீரை மீளப்புதுப்பிப்பதற்குப் பல்பக்க அடிப்படையிலான பல நடவடிக்கைகள் பலவற்றை செயற்படுத்த வேண்டும். இதற்கு ஒரு உடனடி உபாயமாக யாழ்ப்பாணப் பகுதியில் கிடைக்கக் கூடிய மழை நீரை உரிய முறையில் சேகரித்து நிலத்தடி நீரை மீண்டும் சுத்தமான குடிநீராக மாற்றுவது என முன்மொழியப்பட்டுள்ளது. இன்னொரு மாற்று உத்தியாக இரணைமடுக் குளத்தில் இருந்து ஒரு பகுதி நீரை தென்மராட்சி ஊடாக யாழ்ப்பாணத்திற்கும் தீவுப் பகுதிக்கும் கொண்டு செல்வது என்றதிட்டச்செயற்பாடுகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

இந்த விடயங்கள் தொடர்பாகப் பொதுமக்கள் அறிந்திருக்க வேண்டிய விபரங்கள் போதியளவாக இன்னும் முன்வைக்கப்படவில்லை. யாழ்ப்பாணத்து நிலத்தடி நீர் பெருமளவில் பாதிப்படைவதற்குக் கடல் நீர் உட்புகுதல் , கடல் நீர் தடுப்பு முறைகள் பராமரிக்கப்படாமல் விட்டமை, அதிகளவு விவசாய உர உபயோகம், கட்டுப்பாடற்ற முறையில் நிலத்தடி நீரை உறிஞ்சி எடுத்தமை, கட்டுப்பாடற்ற வகையில் கிணறுகளையும் ஆழ்கிணறுகளையும் தோண்டியமை, பாதுகாப்பற்ற மலசலகூட முறைமைகளால் கழிவுகள் நிலத்தடி நீருடன் சேர்கின்றமை, நகர்ப்புறங்களில் மலசலகூடக் கழிவுகள் அகற்றும் முறைமை முறையாக இல்லாமை போன்றவற்றினைக் கூறலாம். இக் காரணிகள் கடந்த 50 வருட காலத்தில் ஒன்று திரட்டிய வகையில் ஏற்படுத்திய தாக்கமே இன்றைய யாழ்ப்பாணக் குடிநீர்ப் பிரச்சினையாகும். இதைவிட சுன்னாகம் மின்பிறப்பாக்கி நிலையத்தில் கழிவு எண்ணைக் கசிவினால் ஏற்பட்ட பாதிப்பின் விஸ்தீரணம் இன்னும் உரிய முறையில் மதிப்பிடப்பட்டு வெளிப்படுத்தப்படவில்லை.



யாழ்ப்பாணக் குடிநீருக்கான ஒரு பாரிய திட்டம் மிகவும் அவசரமானது என்ற விடயம் தற்போதைய நிர்வாக கட்டமைப்பினால் போதியளவிற்கு முன்னிலைப் படுத்தப்படவில்லை. பொதுமக்கள் மத்தியில் ஏனோ தானோ என்ற மனப்பான்மையும் இது வேறு யாருடையதோ பிரச்சினை என்ற மாதிரியான எண்ணமும் மிக உயர்வான அளவில் காணப்படுகின்றது. இதற்கு முக்கிய காரணம் தனிப்பட்ட எதிர்கால அரசியலை உள்நோக்காக வைத்து அறிவு பூர்வமான தகவல்களை வேண்டுமென்றே மறைத்து வேண்டாத உணர்ச்சிகளைத் தட்டி எழுப்பி, அதன் வழி கிளிநொச்சி - யாழ்ப்பாணம் குடிநீர்த்திட்டத்தினை முடக்கிவிட நினைக்கும் அரசியல்வாதிகளும் அறிவுபூர்வமான தகவல்கள் இருந்தும் அவற்றினை ஆரோக்கியமான வகையில் பொதுமக்கள் மத்தியில் கொண்டுசெல்வது மக்கள் கருத்துருவாக்கத்திற்கு உதவ முன்வாரத நேர்மையற்ற புத்திஜீவிகளுமே என்பது வெளிப்படை காரணமாக இருக்கின்றனர். எல்லா அழிவுகளுக்கும் பின்னர் வழக்கம் போல எமக்கு இது இப்படி என்று தெரியாதே என பொதுமக்கள் அங்கலாய்ப்பர் என்பது திண்ணம்.

பொதுமக்கள் முன் மறைக்கப்பட்டுள்ள சில முக்கியமான விடயங்களை இங்கு குறிப்பிடுகின்றோம். கட்டுப்பாடற்ற விவசாய முறையினால் அதாவது ஆயிரக்கணக்கான நீர் இறைக்கும் இயந்திரங்கள் கொண்டு தொடர்ந்து நீரை ஐம்பது வருட காலங்களுக்கு மேலாக வெளியே இறைத்தமையால் ஆயிரக்கணக்கான வருடங்களாக இயற்கையினால் உருவாக்கப்பட்டிருந்த நன்னீர் வில்லைகளில் இருந்த நீரின் தரம் உவர் தன்மையடைய ஆரம்பித்ததோடு நீரின் அளவும் குறையத் தொடங்கியது.

கட்டுப்பாடற்ற உர இரசாயனநாசினிகளின் உபயோகத்தின் காரணமாக நைத்திரேற்றுக்களின் அளவு பெருமளவு நிலத்தடி நீருடன் கலக்க நேர்ந்ததால் குடாநாட்டில் இன்றுவரை உள்ள நிலத்தடி நீர் நுகர்வுக்குரியதற்றதாக மாறியது. இதன் அளவு பத்து ஆண்டுகளுக்கு முன்னரேயே உலக சுகாதார நிறுவனத்தின் நியமங்களை விட குறையத்தொடங்கி இருந்தது. அதே போல தரக்கட்டுப்பாடில்லாத மலசல கூடங்களின் பெருக்கம் காரணமாக நிலத்தடிநீருடன் மலக்கழிவுக் கிருமிகள் கலக்க ஆரம்பித்தன. இதன் வேகத்தைக் குறைப்பதற்கு மலசலக் கழிவுகளை அகற்றுவதற்கான வடிகால் அமைப்புத்திட்டம் ஒன்றுகூட குடாநாட்டில் இல்லை. இவற்றின் தாக்கமாக யாழ்குடாநாடு இலங்கையின் புற்றுநோய் உற்பத்தியில் அதிக வளர்ச்சி வீதத்தைக் கொண்டதாகவும் சிறுநீரகப் பாதிப்பை அதிகமாகக் கொண்ட பிரதேசமாகவும் நெருப்புக் காய்ச்சல் நோயாளிகளை உருவாக்குவதில் முதலிடம் வகிக்கும் மாவட்டமாகவும் மாறியுள்ளது.

இவை பற்றிய தகவல்கள் அறிவுபூர்வமாக புத்திஜீவிகளால் முன்வைக்கப்படாமையால் யாழ் குடாநாட்டில் கிடைக்கும் குடிநீர் உண்மையில் மாசடையவில்லை இது வெறும் புரளி என்ற கருத்தைக் கூட சிலர் துணிந்து முன்வைக்கின்றார்கள். விவசாயத் துறைக்கு ஈடாக மக்களது பொருளாதார, வாழ்வாதார தேவைகளுக்கு வழிவகைகளை முன்வைக்க வேண்டும் என்பதும் விவசாயத்தின் பேண்தகு அளவு மட்டத்தினை நிர்ணயித்துக் கட்டுப்பாட்டிற்குள் கொண்டுவர வேண்டும் என்பதும் இங்கு பேசப்படவேயில்லை. நிலத்தடி நீர் முகாமை பற்றிப் பொதுமக்களுக்கு விழிப்புணர்வும் போதாது.

நீர்இறைக்கும் இயந்திரங்களையும், நீர் வெளியேறும் அளவினையும் கட்டுப்படுத்துவதற்கு உபவிதிகளோ, முகாமையாளர்களோ , முறைமைகளோ இல்லை. நீர் இறைக்கும் இயந்திரங்களை விவசாய தேவைக்கு எவ்வளவு உபயோகிப்பது, நிலக்கீழ் நீரை உறிஞ்சுவது தடுக்கப்பட்டுள்ள பிரதேசங்கள் ஏதாவது குடாநாட்டில் உண்டா? என்பனபோன்ற ஆய்வுப் பெறுபேறுகளும் வெளியிடப்படவில்லை என எந்த ஒரு பிரதேசமும் வரையறுக்கப்படவில்லை.

நுணுக்கமான இந்த முறையினை இயற்கையாகக் கிடைக்கும் மழையினைக் கொண்டு மீளப்புதுப்பிப்பதற்கு மீண்டும் எத்தனை வருட காலங்கள் தேவைப்படும். நிலக்கீழ் அமைப்புகள் முழுவதும் மழைநீரினால் மீண்டும் கழுவப்பட்டாலேயே இது சாத்தியமாகும். வேறு குறுக்கு வழிகள் இதற்கு இல்லை. இதற்கு ஆகக் குறைந்தது மிகக் கடுமையான கட்டுப்பாட்டு முறைமைகளைக் கொண்டு வந்தாலும் கூட ஐம்பது தொடக்கம் நூறு வருட காலங்களாவது தேவைப்படும். அது வரை நீரை அடிப்படையாகக் கொண்டு ஏற்படுகின்ற தாக்கங்கள் குறைந்து செல்வதற்கான வாய்ப்புகள் ஏதும் இல்லை.

யாழ்ப்பாணத்திற்கான குடிநீர் நிலமேற்பரப்பு நீரினைக் கொண்டு வரும் திட்டங்களின் மூலமே குறுகிய காலத்தில் தீர்த்துக் கொள்ள முடியும். இந்த யதார்த்தம் ஏற்றுக்கொள்ளப்பட்டே ஆக வேண்டும். இதன் காரணமாகவே பல்வேறு முன் யோசனைகளின் பின்னர் வடமாகாணத்தினுள் மழை மூலம் கிடைக்கின்ற நீரினை அறிவுப்பூர்வமாகக் குறுகிய காலத்தில் முகாமை செய்து யாழ்ப்பாணக் குடிநீர்ப்பிரச்சினையைத் தீர்ப்பதற்கு ஆலோசனைகள் முன்வைக்கப்பட்டன.

அரசியல் காரணங்களுக்காக வெளிப்படையாகக் கூற முடியாத பிரச்சினைகளும் இதன் மூலம் தவிர்க்கக்கூடியதாக இருக்கும். இரணைமடுவில் இருந்து நீர் எடுக்க முடியாது என்ற எதிர்ப்புக் கோவத்தைக் கிளப்பியதன் மூலம் அரசாங்கம் மொறகஹகந்த திட்டத்தினை அங்கீகரித்து அதன் மூலம் மகாவலி நீரினைக் கொண்டு வருவதாகத் தீர்மானித்துள்ளதாக தெரிகிறது. இதன் தார்ப்பரியமும் தாக்கங்களும் மிக இலகுவாக ஊகிக்கக் கூடியனவாகும்.

சர்வதேச நிதி வழங்கல் நிறுவனங்களின் நெருக்கடிகள், மாறிவரும் கொள்கைகள், இலங்கை தன்னை தான் ஒரு நடுத்தர வருமானத்தைப் பெறும் நாடு என பிரகடனம் செய்தமையால் சலுகை அடிப்படையிலான பெறுகைகளுக்குத் தகைமை இழந்தமை, பல்பக்க நிதி நிறுவனங்களின் முன்னுரிமைகள் போன்ற பல்வேறு நெழிவுசுழிவுகளூடாகக் கிளிநொச்சி மாவட்ட விவசாயிகளின் பிரச்சினைகளுக்குப் பெருமளவில் தீர்வு வழங்குகின்ற அதே நேரம் நீர்ப்பாசன முறைமைகளை அபிவிருத்தி செய்தல், கிளிநொச்சி பூநகரி தீவுப்பகுதி உட்பட நீண்ட பிரதேசத்திற்குக் குடிநீர் வழங்குதல் மற்றும் யாழ்நகருக்கான திண்ம கழிவகற்றும் வடிகாலமைப்பு முறைமையொன்றை நிறுவுதல் போன்ற பல்வேறு முக்கியமான அம்சங்களையும் ஒன்று திரட்டி மிகப் பெரியதொரு முதலீட்டுத் திட்டத்தினை ஆசிய அபிவிருத்தி வங்கி நிபுணர்கள் வடிவமைத்துத் தந்தார்கள்.

மக்கள் மிகவும் புத்திபூர்வமாக வகுக்கப்பட்ட அத் திட்டத்தினை வெறுமனே உணர்ச்சிகளின் அடிப்படையில் நிராகரித்தால் அது யாழ்ப்பாணத்துப் புத்திஜீவிகளின் தோல்வியாகவே கருதப்படவேண்டிவரும். எனவே தயவு செய்து இத்திட்டத்தினை மாகாணசபை அவசரப்பட்டு நிராகரித்திருந்த போதும் பல்வேறு மட்டங்களுடனும் தொடர்பு கொண்டு உடனடியாக அதனை அமுல்படுத்துவதற்கு முயற்சிகளைச் செய்ய வேண்டும்.

யாழ்ப்பாணச் சமூகம் பேண்தகு சமூகமாக நீண்ட பாரம்பரிய நாகரிகத்தைத் தொடர்ந்தும் பேணும் சமூகமாக நிலைபெற நாம் வழிசமைத்துக் கொடுத்தல் வேண்டும். மக்களும், சமூக நிறுவன அமைப்புகளும் தொடர்ந்து குரல்கொடுத்து எமது எதிர்காலத்தைக் காக்க முன்வரவேண்டும்.

**ஓய்வுநிலைப் பேராசிரியர்**
**இரா. சிவசந்திரன்,**
**பணிப்பாளர், சிந்தனைக்கூடம்**

# யாழில் சிறுமிகளைச் சீரழித்த 80 வயது போதகர் கொழும்பில் கைது

யாழ்.கோப்பாய் பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட இருபாலைப் பகுதியில் இயங்கி வரும் கானான் ஜெப ஆலயத்தின் மாணவர் விடுதியில் தங்கியிருந்த சிறுமிகளை பாலியல் துஷ்பிரயோகத்துக்கு உட்படுத்திய குற்றச்சாட்டில் தேடப்பட்ட 80 வயதான போதகர் கொழும்பில் கைது செய்யப்பட்டுள்ளார் என்று கோப்பாய் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி தெரிவித்தார்.




கானான் ஜெப ஆலயத்தின் கட்டுப்பாட்டிலிருந்த மாணவர் விடுதி வடக்கு மாகாண கல்வி அமைச்சின் அனுமதியுடன் மாத்திரமே இயங்கியது.

சிறுவர் நன்னடத்தை திணைக்களத்தின் அனுமதியைப் பெறாமல் சட்டவிரோதமாகச் செயற்பட்டிருந்தது. சிறுவர் இல்ல சிறுமிகள் 3 பேர் தப்பித்துச் சென்றதையடுத்து இந்த விடயம் அம்பலமாகியிருந்தது. அங்கிருந்த சிறுமிகள் வேறு இல்லத்துக்கு மாற்றப்பட்டிருந்தனர்.

சிறுமிகளிடம் முன்னெடுக்கப்பட்ட விசாரணையில் ஆலயத்தின் தலைமைப் போதகர் தம்மிடம் தகாத முறையில் பாலியல் துஷ்பிரயோகத்துக்கு உட்படுத்தியதாகத் தெரிவித்திருந்தனர்.

இதையடுத்து 80 வயதான தலைமைப் போதகரைக் கைது செய்ய பொலிஸார் நடவடிக்கை எடுத்த போதும் அவர் தலைமறைவாகியிருந்தார். இந்தநிலையில் கொழும்பில் நேற்றுக் கைது செய்யப்பட்ட போதகரை உடனடியாகவே அங்கு நீதிமன்றில் முற்படுத்தியபோது அவரது கடவுச்சீட்டை முடக்கிய மன்று பிணையில் விடுவித்தது. யாழ்ப்பாணத்திலுள்ள நீதிமன்றில் உடனடியாக சரணடையுமாறும் அறிவுறுத்தியுள்ளது.

# "தலைவிரித்து தாண்டவம் ஆடும் போதைப்பொருள்"

இன்றைய காலகட்டத்தில் போதைப் பொருள் பாவனையானது அதிகரித்து வருவதாகவும் இதனால் குடும்பங்கள் முதற்கொண்டு மாணவர்கள் வரை பாதிக்கப்படுவதாகவும் அத்தோடு சமூக பிறழ்வுகள் இடம்பெறுவதாகவும் இலங்கை சட்ட உதவி ஆணைக்குழு மல்லாகம் பிராந்திய நிலையப் பணிப்பாளர் ஸ்ரீசண்முகான் கோகுலன் தெரிவித்துள்ளார்.



குடும்பப் புனர்வாழ்வு நிறுவனத்தால் முன்னெடுக்கப்பட்ட நிகழ்ச்சி திட்டத்தின் பின்னர் சமூகம் ஊடகத்திற்கு கருத்து தெரிவிக்கும் போதே அவ்வாறு தெரிவித்துள்ளார்.

தொடர்ந்தும் அவர் குறிப்பிடுகையில்,

இன்றைய சமூகத்தினரின் தேவைகளிற்காக குடும்பப் புனர்வாழ் நிறுவனம் ஆற்றிவருகின்ற சேவை காலத்தின் தேவையாக காணப்படுகின்றது. எமது நிலையத்திற்கு வருகை தரும் அநேகமான சேவை நாடிகள் தமது குடும்பம் சார்ந்த வழக்குகள் சார்பாக உடனிலை ஆற்றுப்படுத்தலை செய்யவேண்டிய தேவையுடையோராகவே காணப்படுகின்றனர்.

எதிர்காலத்திலும் குடும்ப புனர்வாழ்வு நிறுவனத்துடன் சேர்ந்து செயற்பாடுகளை முன்னெடுக்கும் பொழுது சமூகம் உளநிலை ஆற்றுப்படும் என்பதே எமது நம்பிக்கையாகும். இன்றைய சூழலில் போதைப்பொருள் மற்றும் மது பாவனையும் குறிப்பாக யாழ் மாவட்டத்தில் அதிகரித்து வருகின்றது.

இதனால் குடும்பங்களில் மோசமான குடும்ப வன்முறைகளும் பாலியல் குற்றங்கள் போன்றனவும் இடம்பெறுகின்றன. அதுமட்டுமன்றி போதைப் பொருள் பாவனையால் பாடசாலை மாணவர்கள் உட்பட பல்கலைக்கழக மாணவர்கள் வரை பாதிக்கப்பட்டு அவர்களது கல்வி கேள்விக் குறிக்கு உள்ளாகியுள்ளது.

பல்கலைக்கழக விடுதிகளில் கூட போதைப்பொருட்கள் பயன்படுத்தப்படுவதனை அறிந்து கொள்ள முடிகின்றது. ஒரு குடும்பத்தில் குடும்ப தலைவன் போதைக்கு அடிமையாயின் தனது உழைப்பில் 80 வீதத்தினை அதற்காக செலவிடுவார் இதனால் குடும்பத்திலுள்ள பிள்ளைகள் உரிய நேரத்தில் உணவினை பெற்றுக் கொள்ளவும் சிக்கல்கள் ஏற்பட்டு பிள்ளைகள் சோர்வடைந்து தமது கல்வியினை தொடரமுடியாத நிலை உருவாகும்.

ஆகவே போதைப்பொருட்களை முழுவதுமாக இல்லாதொழிக்க வேண்டும் எனவும் தெரிவித்தார்.

# யாழ்ப்பாணத்தின் முக்கிய இடத்தில் அரிய தமிழ்க் கல்வெட்டு கண்டுபிடிப்பு

சண்டிலிப்பாய் பிரதேச செயலாளர் நிர்வாகப் பிரிவுக்கு உட்பட்ட சண்டிலிப்பாய் மேற்கு சொத்துப்புடிச்சி கிராமத்தில் அரிய தமிழ்க் கல்வெட்டு ஒன்றை அக்கிராம மக்கள் அடையாளம் கண்டுள்ளனர்.

இவ்விடம் சிறிய பற்றைகள் நிறைந்த ஒதுக்குப்புறமாக இருந்ததால் இக்கல்வெட்டுப் பற்றி மக்கள் முன்னர் அறிந்திருக்கவில்லை. ஆயினும் பிற தேவைக்காக கடந்த வாரம் இவ்விடத்தைத் துப்பரவு செய்த போது அழிவடைந்த கட்டிட அழிபாடுகளிடையே இக்கல்வெட்டை அடையாளம் கண்ட மக்கள் அது பற்றி தமது கிராம சேவக அதிகாரியிடம் தெரியப்படுத்தியிருந்தனர்.



இதைத் தெரிந்து கொண்ட யாழ்ப்பாணப் பிராந்தியத் தொல்லியல் திணைக்கழக அதிகாரிகளில் ஒருவரான திரு.விஸ்வலிங்கம் மணிமாறனும் பேராதனைப் பல்கலைக்கழக வரலாற்றுத்துறை விரிவுரையாளர் கணேசலிங்கம் ஜெயதீஸ்வரனும் அவ்விடத்திற்குச் சென்று உரிய முறையில் இக்கல்வெட்டை மைப்பிரதி எடுத்து அதன் வரலாற்று முக்கியத்துவத்தை வெளிக்கொணர்துள்ளனர்.

ஏறத்தாழ மூன்றடி உயரமும் ஒரு அடி அகலமும் கொண்ட இக்கல்வெட்டு பத்து வரிகளில் பொறிக்கப்பட்டுள்ளது. இது இற்றைக்கு 200 ஆண்டுகளுக்கு முன்னால் பொறிக்கப்பட்ட கல்வெட்டாக இருக்கலாம் என்பதை அவற்றின் எழுத்தமைதி கொண்டு உறுதிப்படுத்த முடிகின்றது. இக்கல்வெட்டின் தொடக்கத்தில் காணப்படும் ஓம் என்ற மங்கல மொழியுடன் தொடங்கும் முதலிரு வரிகள் தேய்வடைந்த நிலையில் காணப்படுகின்றன. அவை கிராமத்தின் பண்டைய பெயரை அல்லது கல்வெட்டுப் பொறிக்கப்பட்ட காலத்தைக் குறிப்பதாக இருக்கலாம்.

ஏனைய வரிகளில் இப்பிரதேசத்தில் வாழ்ந்த சு.சபாபதிப்பிள்ளை என்ற பெரியவர் இக்கிராம மக்களினதும், கால்நடைகளினதும் நன்மை கருதி அமைக்கப்பட்ட வயற்கேணி மடம் பற்றிக் கூறியிருப்பதை இரு ஆய்வாளரும் உறுதிப்படுத்தியுள்ளனர்.

இவ்வாசகம் உண்மையென்பதை இக்கல்வெட்டுடன் காணப்படும் பெரிய கேணி, ஆவுரஞ்சிகல் என்பன உறுதிப்படுத்துகின்றன. இவற்றுடன் மடமும், சுமைதாங்கியும் இருந்ததாக மக்கள் கூறும் செய்தியை அவ்விடத்தில் காணப்படும் கட்டிட அழிபாடுகள் மேலும் உறுதிப்படுத்துகின்றன.

பேராசிரியர் புஸ்பரட்ணம் இக்கல்வெட்டின் முக்கியத்துவம் பற்றிக் கூறுகையில் யாழ்ப்பாணத்தில் மோட்டார் வாகனப் போக்குவரத்துச் சாதனங்கள் பாவனைக்கு வருவதற்கு முன்னர் பண்டு தொட்டு மக்கள் கால் நடையாகவும், மாட்டு வண்டியிலுமே பயணம் செய்து வந்தனர்.

அவ்வாறு பயணம் செய்வோரின் நன்மை கருதி முக்கிய போக்கு வரத்து மையங்களில் சுமைதாங்கி, ஆவுரஞ்சிகல், மடம், கேணி அல்லது சிறு குளம் அமைக்கப்படுவது வழக்கமாக இருந்தது. இதை யாழ்ப்பாணத்தின் பல இடங்களில் காணமுடிகின்றது.

இவற்றில் இருந்து யாழ்ப்பாணத்தின் பண்டைய போக்கு வரத்துப் பாதைகளை அடையாளம் காணமுடிவதுடன் அவ்விடங்கள் அக்காலத்தில் சிறு வர்த்தக நகராகவும் இருந்ததை உறுதிப்படுத்த முடிகின்றது. இந்நிலையில் எனது மாணவர்கள் சண்டிலிப்பாய் மேற்கிலுள்ள சொத்துப்புடிச்சி கிராமத்தில் காணப்பட்ட கல்வெட்டை முறையாகப் படியெடுத்து அதைச் சரிவர வாசித்திருப்பதுடன் அதன் அருகில் இருக்கும் கேணி, ஆவுரச்சிகல் என்பவற்றையும் அடையாளப்படுத்தியுள்ளனர்.

## வடக்கு மாகாண மாற்றுத்திறனாளிகளுக்கான மாபெரும் இசை போட்டி




வடக்கு மாகாண மாற்றுத்திறனாளிகளின் இசைத் திறமையை வெளிக் கொண்டுவரும் முகமாக முதல்முறையாக மாற்றுத் திறனாளிகளுக்கான மாபெரும் இசைப் போட்டி யாழ்ப்பாணத்தில் இடம்பெறவுள்ளது.

சாவிகா சங்கீத அறிவாலயத்தின் ஏற்பாட்டில் எதிர்வரும் 15ஆம் திகதி சனிக்கிழமை நல்லூர் மங்கையர்க்கரசி மகா வித்தியாலய பிரதான மண்டபத்தில் குறித்த இசை போட்டிகள் இடம் பெற உள்ளன.

இப்போட்டிகளில் பங்கெடுக்க விரும்பும் மாற்றுத்திறனாளிகள் போட்டி இடம்பெறுகின்ற தினத்தில் காலை 9.00 மணி முதல் மதியம் 1.00 மணி வரையான காலப்பகுதியில் போட்டி இடம்பெறும் மண்டபத்தில் பதிவுகளை மேற்கொள்ள முடியும்.

போட்டியாளர்கள் தனிப்பாடல், தனிவாத்திய இசைக்கே அனுமதிக்கப்படுவர்.

போட்டியாளர்கள் தமக்கு விருப்பமான ஏதாவது ஒரு பாடலினை (கர்நாடக சங்கீதம்/ திரையிசை/ மேலைத்தேயம்) 6 நிமிடங்களுக்குள் பாட இசைக்க முடியும்.

வாத்தியம் இசைப்போர் குறித்த குறித்த வாத்தியக்கருவியை கொண்டுவருதல் வேண்டும். போட்டி நிறைவுறும் வரை பாதுகாவலர் போட்டியாளருடன் இருக்க வேண்டும்.

இப்போட்டிகளில் அனைத்து விதமான மாற்றுத் திறனாளிகளும் வயது வேறுபாடின்றி பங்கெடுக்க முடியும் என யாழ் ஊடக அமையத்தில் நடத்திய ஊடகவியலாளர் சந்திப்பில் தெரிவித்துள்ளனர்.

# நெசவுசாலையை அத்துமீறி கைப்பற்றி அடாவடித்தனம் வெளியேற்றுமாறு கோரி போராட்டம்!



அரசாங்கத்திற்கு சொந்தமான அச்சுவேலி நெசவுசாலையை அத்துமீறி கைப்பற்றி அடாவடித்தனம் புரிந்த மதப் பிரிவினரை வெளியேற்றுமாறு கோரி போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

சிவசேனை அமைப்பின் ஏற்பாட்டில் அச்சுவேலி நெசவுசாலை முன்றலில் நேற்று செவ்வாய்கிழமை காலை 8 மணியளவில் இந்த போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

யுத்தத்தின் பின் இயங்காத குறித்த நெசவுசாலை கட்டடத்தில் ஒரு மதஸ்தலம் அமைக்கப்பட்டு பிரார்த்தனை வழிபாடுகள் முன்னெடுக்கப்பட்டு வந்துள்ளன.

குறித்த மதஸ்தலத்தினால் அதிகளவு சத்தம் போட்டு பிரார்த்தனை வழிபாடுகள் மேற்கொள்ளப்படுவதாகவும், இதன் காரணமாக மாணவர்கள் பாதிக்கப்படுவதாகவும் முறைப்பாடு செய்யப்பட்டது.

அதன்படி மல்லாகம் நீதிமன்றில் வழக்கொன்றும் தாக்கல் செய்யப்பட்ட நிலையில் கடந்த வெள்ளிக்கிழமை போதகர் உட்பட மூவர் அருகில் உள்ள வீடொன்றுக்குள் புகுந்து தாக்குதல் நடத்தியுள்ளனர்.

இச்சம்பவத்தில் தாக்குதல் நடத்தியவர்கள் கைது செய்யப்பட்டு பிணையில் விடுவிக்கப்பட்ட நிலையில் அச்செய்தியை வெளியிட்டமைக்காக உதயன் பத்திரிகை அலுவலகத்துக்குள்ளும் அடாவடியில் ஈடுபட்டனர். இது தொடர்பாக யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டிருந்த நிலையில், போதகர் உட்பட 6 பேர் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

இந்நிலையில் தற்போது குறித்த மதஸ்தலம் அமைந்துள்ள நெசவுசாலையினை மீளவும் கைத்தொழில் அமைச்சு பொறுப்பெடுத்து நடத்தவேண்டும் என கோரி இன்று போராட்டம் இடம் பெற்றது.

# திருமலையில் சிங்கள– தமிழர்களுக்கு இடையில் மோதல்

## மூத்த சட்டத்தரணி ஸ்ரீகாந்தா சொல்வது என்ன?

திருகோணமலை திருக்கடலூர் - விஜிதபுர பகுதியில் தமிழ் மற்றும் சிங்கள மீனவர்களுக்கு இடையில் இடம்பெற்றிருந்த கைகலப்பானது, இனப்பிரச்சனையை தோற்றுவிக்கின்ற முரண்பாடு குழப்பம் அல்ல என என மூத்த சட்டத்தரணி ஸ்ரீகாந்தா தெரிவித்துள்ளார்.

திருகோணமலை மாவட்ட நீதிமன்றத்தில் இடம்பெற்ற குறித்த வழக்கில் சந்தேக நபர்கள் சார்பாக பிரசன்னமாகிய பின்னர் ஊடகங்களுக்கு இவ்வாறு தெரிவித்துள்ளார்.

நீதவான் முன்னிலையில் இதனை தெரிவித்த போது அதற்கு சிங்கள சட்டத்தரணிகளும் அதனை ஆமோதித்திருந்ததாக சட்டத்தரணி ஸ்ரீகாந்தா குறிப்பிட்டுள்ளார்.

இந்த கைகலப்பானது சிங்கள மற்றும் தமிழ் மக்களுக்கு இடையிலான பிரச்சனை அல்ல என்றும் ஒரே தொழிலை மேற்கொள்ளுகின்ற அதாவது மீன்பிடி தொழிலை மேற்கொள்ளுகின்ற இரு தரப்புக்கு இடை



யில் தொழில் ரீதியாக இடம்பெற்ற கைகலப்பு என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

ஆனால் பொலிசார் இதனை இனப்பிரச்சனைகளை ஏற்படுத்தும் அம்சங்கள் என குறிப்பிட்டிருந்ததாகவும் ஆனால் இது அவ்வாறான முரண்பாடு இல்லை என்றும் சட்டத்தரணி ஸ்ரீகாந்தா திட்டவட்டமாக தெரிவித்திரந்தார்.

எனவே சமூகத்தின் நலன்கள் தொடர்பில் அக்கறை செலுத்தி இதனை சட்ட ரீதியாக அணுகியுள்ளதாகவும் சட்டத்தரணி ஸ்ரீகாந்தா மேலும் தெரிவித்துள்ளார்.

# 3600 ஏக்கர் காணியை மீட்டு தாருங்கள் திருமலை திரியாய் மக்கள் கோரிக்கை





3600 ஏக்கர் காணியை மீட்டு தருமாறு திருகோணமலை-திரியாய் பிரதேச மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

தமிழ் தேசிய கூட்டமைப்பின் திருகோணமலை மாவட்ட கிளையின் தலைவர் எஸ் குகதாசன் தலைமையில் திரியாய் பிரதேசத்தில் பொது மக்கள் பிரச்சினைகள் ஆராயும் விசேட கூட்டம் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

இந்நிலையில் திரியாய் மக்கள் எம். ஏ சுமந்திரன் மற்றும் இரா.சாணக்கியனிடம் இக்கோரிக்கையை முன் வைத்துள்ளனர்.

மேலும் திரியாய் கிராமம் பல்வேறு தரப்புக்களாலும், பங்கு போட்டு அபகரிக்கப்பட்டு வருகின்றது. நாங்கள் வாழ முடியாத சூழலுக்கு தள்ளப்பட்டுக் கொண்டிருக்கின்றோம்.

திரியாயில் உள்ள கிரிஹன்டுசாய விகாரையின் விகாரதிபதி தனது விகாரைக்கு 2010 ஆண்டில் 3600 ஏக்கர் நிலம் ஒதுக்கி இருந்ததாகவும், இது நல்லாட்சிக் காலத்தில் 257 ஏக்கராக குறைக்கப்பட்டு விட்டதாகவும், 3600 ஏக்கர் காணியை தனக்கு மீண்டும் அளந்து தருமாறு பல மட்டங்களிலும் வலியுறுத்தி வருகின்றார்.

இந்த 3600 ஏக்கர் நிலப்பகுதியை அளப்பதற்கு உரிய நடவடிக்கை எடுக்குமாறு ஜனாதிபதி செயலகத்திலிருந்து குச்சவெளி பிரதேச செயலாளருக்கு கடிதம் வந்துள்ளதாகவும், கிரிஹன்டுசாய விகாரைக்கு 3600 ஏக்கர் நிலம் அளந்தால் எமது வயல் நிலங்களும் வீடு வளவுகளும் அதற்குள் சென்று விடும் எங்களுக்கு வாழ வழி இருக்காது. நாங்கள் எல்லோரும் கடலிலே குதிக்க வேண்டிய சூழல்தான் வரும் எனவும் குறிப்பிடுகின்றனர்.

கிரிஹன்டுசாய விகாரையின் விகாரதிபதி திரியாவில் பரவி பாஞ்சான் என்ற இடத்தில் உள்ள தமிழர்களின் ஒப்பக்காணிகளை துப்பரவாக்கி நெல் பயிரிட்டு வருகின்றார். மக்கள் அதிகாரிகளிடம் முறைப்பாடு செய்த பொழுதும் காத்திரமான ஒரு நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. காவல்துறை தாங்கலால் ஒன்றும் செய்ய முடியாதுள்ளது இதை மேலிடத்தில் கதைத்து பாருங்கள் என குறிப்பிடுவதாகவும் அப்பகுதி மக்கள் சுட்டிக்காட்டுகின்றனர்.

அத்துடன் ஆத்திக்காடு. பாவலன் கண்டல். நீராவிக் கண்டல். ஆகிய பகுதிகளிலே பல ஆண்டுகளுக்கு மேலாக தமிழ் மக்கள் விவசாயம் செய்து வரும் ஏறத்தாழ ஆயிரம் ஏக்கர் நெல் வயலை தொல்பொருள் துறையினர் கல்லு போட்டு வைத்துள்ளதாகவும். கடந்த மூன்று ஆண்டுகளாக அதற்குள்ளே விவசாயம் செய்ய முடியாத நிலை ஏற்பட்டுள்ளதாகவும் திரியாய் மக்கள் குறிப்பிடுகின்றனர்.

ஆகவே திரியாய் மக்களுக்குச் சொந்தமான 3600 ஏக்கர் காணியை மீட்டுத்தருமாறும் இல்லாவிட்டால் பாரிய போராட்டங்களை முன்னெடுக்க நேரிடுவதாகவும் அப்பகுதி மக்கள் குறிப்பிடுகின்றனர்.

# ஆளுநரால் அகற்றப்பட்ட புன்னைக்குடா வீதி பெயர்ப்பலகை நஸீர் அஹமட்டினால் மீள நடப்பட்டது




கிழக்கு மாகாண ஆளுநர் அனுராதா யஹம்பத்தின் உத்தரவின் பேரில் 'எல்மிஸ் வல்கம' வீதி என சிங்களப் பெயராக மாற்றுவதற்காக அகற்றப்பட்ட புன்னைக்குடா வீதி எனும் பெயர்ப்பலகை அதே 'புன்னைக்குடா வீதி' என்ற பழைய நாமத்தோடு அமைச்சர் நஸீர் அஹமட்டினால் மீள நடப்பட்டது.

இந்நிகழ்வு கொழும்பு - மட்டக்களப்பு நெடுஞ்சாலையின் ஏறாவூர் நகர புன்னைக்குடா வீதி சந்தியில் இடம்பெற்றது. நிகழ்வில் பிரதேச செயலாளர் நிஹாறா மௌஜூத் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

# வெருகல் படுகொலை சிவப்பு சித்திரையின் 19 வது ஆண்டு நினைவு தினம் அனுஷ்டிப்பு

மட்டக்களப்பு வாகரை பிரதேச சபைக்குட்பட்ட வெருகல் படுகொலை சிவப்பு சித்திரையின் 19வது ஆண்டு நினைவு தினம்,

கதிரவெளியில் உள்ள வெருகல் மலை மக்கள் பூங்காவில் அனுஷடிக்கப்பட்டது.

2004ம் ஆண்டு சித்திரை மாதம் 10 ஆம் திகதி இடம்பெற்ற வெருகல் படுகொலையில், கட்சியின் உறுப்பினர்களை நினைவு கூரும் முகமாகவே நினைவு தினம் அனுஷடிக்கப்பட்டது.

படுகொலை செய்யப்பட்டு உயிர் நீத்தவர்களின் ஆத்மா சாந்தி

வேண்டி விசேட பூசை இடம்பெற்றதுடன், மலர் தூபி, அஞ்சலியுடன், ஈகைச் சுடரும் ஏற்றப்பட்டது.



நினைவு தின நிகழ்வில் தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சியின் தலைவரும் ,கிராமிய வீதிகள் மற்றும் உட்கட்டமைப்பு வசதிகள் இராஜாங்க அமைச்சர் சிவநேசதுரை சந்திரகாந்தன் ,முன்னாள் கிழக்கு மாகாண சபை உறுப்பினர்களான திரவியம் , பிரசாந்தன் மற்றும் கட்சியின் உறுப்பினர்கள் பொதுமக்கள் கலந்து கொண்டனர்..இதன்போது தமிழ் மக்கள் விடுதலைப்

புலிகள் கட்சியின் தலைவர் சிவநேசதுரை சந்திரகாந்தன் கருத்து தெரிவித்தார்.

# கல்முனை மாநகர எல்லைக்குட்பட்ட அனைத்து தனியார் வகுப்புக்கள் மற்றும் கல்வி நிலையங்களுக்கான முக்கிய அறிவித்தல் !




கல்முனை மாநகர எல்லைக்குட்பட்ட அனைத்து தனியார் கல்வி நடவடிக்கைகளினையும் தற்காலிகமாக இடைநிறுத்தி ஒத்துழைப்பு வழங்குமாறு கல்முனை மாநகர ஆணையாளர் ஏ.எல்.எம்.அஸ்மி அறிவித்துள்ளார்.

இதற்கமைய கல்முனை மாநகர எல்லைக்குட்பட்ட அனைத்து தனியார் கல்வி நிலையங்களிலும் தரம் 01 தொடக்கம் தரம் 10 வரையான மாணவர்களுக்கான அனைத்து கல்வி நடவடிக்கைகளினையும் 2023.04.11 ம் திகதி தொடக்கம் 2023.04.24 ம் திகதி வரை தற்காலிகமாக இடைநிறுத்தி ஒத்துழைப்பு வழங்குமாறு அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

மேலும் முஸ்லிம்களின் புனித நோன்பு மற்றும் தமிழ் சிங்கள புதுவருடப்பிறப்பு போன்ற பல முக்கியத்துவம் வாய்ந்த பண்டிகைகளினைக் கொண்ட இம்மாதமானது அதிக உஷ்ணம் நிறைந்ததாக காணப்படுகின்ற போதிலும் கல்முனை மாநகர எல்லைக்குட்பட்ட தனியார் கல்வி நிலையங்களில் பொருத்தமற்ற நேரங்களில் தொடர்ச்சியான வகுப்புக்கள் நடாத்தப்பட்டு வருவதானது மாணவர்களுக்கும் பெற்றோர்களுக்கும் பொதுமக்கள் மற்றும் வர்த்தக நடவடிக்கைகளுக்கும் பல்வேறு சிரமங்களை ஏற்படுத்துவதாக மத அமைப்புக்கள் மற்றும் பொதுமக்களிடம் இருந்து எமக்கு தொடர்ச்சியாக கிடைக்கப்பெறுகின்ற முறைப்பாடுகளுக்கு அமைவாக இந் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக அவர் அனுப்பி வைத்துள்ள செய்தி குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# அக்கரைப்பற்று நீதிமன்ற கட்டடத் தொகுதிக்கு தீ; விசாரணையை துரிதப்படுத்துமாறு நீதவான் மீண்டும் உத்தரவு

அக்கரைப்பற்று நீதவான் நீதிமன்ற அலுவலகக் கட்டடத் தொகுதிக்கு தீ மூட்டியமை தொடர்பில் கைது செய்யப்பட்டுள்ள சந்தேகநபர்களை தொடர்ந்தும் விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிடப்பட்டுள்ளது.

அக்கரைப்பற்று நீதவான் M.H.M. ஹம்சா முன்னிலையில் ZOOM ஊடாக குறித்த வழக்கு இன்று விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட போது, சந்தேகநபர்களை எதிர்வரும் 25 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

சம்பவம் தொடர்பான விசாரணையை துரிதப்படுத்துமாறு இதன் போது நீதவான் மீண்டும் உத்தரவிட்டுள்ளார்.

கடந்த வருடம் டிசம்பர் மாதம் 21 ஆம் திகதி அதிகாலை 3 மணியளவில் அக்கரைப்பற்று நீதிமன்ற கட்டடத் தொகுதியில் தீ பரவியிருந்தது.

இத்தீயினால் நீதிமன்றத்தின் வழக்குகளுடன் தொடர்புடைய அதிகளவிலான ஆவணங்கள் தீக்கிரையாக்கப்பட்டன.

சம்பவம் தொடர்பில் அக்கரைப்பற்றை சேர்ந்த 24 வயதான இருவரும், 18 வயதான ஒருவரும் கைது செய்யப்பட்டனர்.

இவர்களிடம் முன்னெடுக்கப்பட்ட விசாரணைகளில் ஒப்பந்தத்தின் அடிப்படையில், ஒருவரிடம் பணம் பெற்றுக்கொண்டு நீதிமன்ற கட்டடத்தொகுதிக்கு தீ வைக்கப்பட்டமை உறுதி செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

# உள்ளூராட்சி மன்றத் தேர்தலை ஒத்திவைக்க மீண்டும் தீர்மானம்

உள்ளூராட்சி மன்றத் தேர்தலை மீண்டும் ஒத்திவைக்க தீர்மானிக்கப்பட்டுள்ளது.

தேர்தல் ஆணைக்குழுவின் விசேட சந்திப்பில் இந்த தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இதற்கு முன்னர், கடந்த மார்ச் 9ஆம் திகதி நடத்த திட்டமிடப்பட்டிருந்த உள்ளூராட்சி தேர்தல் எதிர்வரும் ஏப்ரல் 25ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டது.

இந்தநிலையில், இரண்டாவது தடவையாகவும் உள்ளூராட்சி மன்றத் தேர்தல் பிற்போடப்பட்டுள்ளது.

எனினும், தேர்தலுக்கு தேவையான நிதி கிடைப்பதற்கான உறுதியான திகதி அல்லது தேர்தல் தொடர்பான வழக்கில் உயர் நீதிமன்றின் தீர்ப்பு என்பவற்றின் அடிப்படையில் புதிய திகதியொன்று தீர்மானிக்கப்படும் என தேர்தல் ஆணைக்குழு விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும், உள்ளூராட்சி மன்ற தேர்தலை நடத்துவதற்கு தேர்தல் ஆணைக்குழு எடுத்துள்ள அனைத்து நடவடிக்கைகளும் தொடர்ந்தும் முன்கொண்டு செல்லப்படுவதாக அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# வீதியால் சென்றால் கட்டணம்

## வருகிறது புதிய நடைமுறை



நாட்டிலுள்ள அனைத்து பிரதான மற்றும் மாகாணங்களுக்கு இடையிலான வீதிகளையும் கட்டணச்சாலைகளாக மாற்றுவதற்காக, வீதிப் பராமரிப்பு நிதியை ஆரம்பிக்கும் நடவடிக்கையில் அரசாங்கம் ஈடுபட்டுள்ளது.

இதன் ஆரம்ப நிதியாக 100 மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளதாக போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சர் கலாநிதி பந்துல குணவர்தன தெரிவித்துள்ளார்.

முறையான வீதிப் பராமரிப்பை உறுதி செய்வதற்கும் வீதி நிர்மாணம் மற்றும் பராமரிப்பிற்காக அரசாங்கம் மேற்கொள்ளும் பாரிய செலவினங்களைக் குறைப்பதற்கும் ஏனைய நாடுகளுக்கு இணையாக ஆர்.எம்.எப்.ஐ நிறுவுவதற்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளதாக அமைச்சர் குணவர்தன தெரிவித்துள்ளார்.

# பயங்கரவாத எதிர்ப்பு சட்டமூலத்தை மீளாய்வு செய்யுங்கள்

## ஜனாதிபதியிடம் மொட்டு கட்சி விடுத்துள்ள கோரிக்கை

பயங்கரவாத எதிர்ப்பு சட்டமூலத்தை மீளாய்வு செய்து ஜனநாயகக் கோட்பாடுகளை மீறாத சட்டமூலம் ஒன்றை முன்வைக்குமாறு ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன ஜனாதிபதியிடம் கோரிக்கை விடுத்துள்ளது.

கொழும்பில் நேற்று செவ்வாய்கிழமை இடம்பெற்ற ஊடக சந்திப்பிலேயே அந்த கட்சியின் பொதுச்செயலாளர் சட்டத்தரணி சாகர காரியவசம் இந்த கோரிக்கையை விடுத்திருந்தார்.

இதன்போது கருத்து வெளியிட்ட அவர், 'ரீலங்கா பொதுஜன பெரமுன மக்களின் கருத்துக் கூறும் அடிப்படை உரிமையைக் குறைக்கும் எந்தவொரு சட்டமூலத்திற்கும் இணக்கம் தெரிவிக்காது.

மக்களின் அடிப்படை உரிமைகளைப் பாதுகாப்பதற்காக 'ரீலங்கா பொதுஜன பெரமுன எப்போதும் செயற்படும்.

பயங்கரவாத எதிர்ப்புச் சட்டமூலத்தில் குறிப்பிடப்பட்டுள்ள பயங்கரவாதத்தின் வரையறை, சில வரம்புகள் மற்றும் கட்டுப்பாடுகளுக்கு உட்பட்டதாக இருக்க வேண்டும் இந்த சட்டமூலமானது கருத்து வேறுபாடுகளின் ஒவ்வொரு செயலையும் பயங்கரவாதம் என வரையறுத்தால், அது ஜனநாயகத்திற்கு ஏற்றதாக அமையாது.

சட்டமூலத்தை முன்வைக்கும் நீதி அமைச்சருக்கும் மேற்படி சட்டத்தின் மீது நம்பிக்கை இல்லை என்பது ஊடகங்களில் வெளியாகும் செய்திகளில் தெளிவாகின்றது.

ஆகவே இச்சட்ட மூலத்தை மறுபரிசீலனை செய்யவும், நிபுணர் குழுவை நியமித்து ஆய்வு செய்யவும், ஜனநாயகக் கோட்பாடுகளை மீறாத வகையில் தயாரிக்கவும் ஜனாதிபதியிடம் கோரிக்கை விடுக்கின்றோம்.

ஒரு அரசாங்கம் ஒரு சட்டமூலத்தை அறிமுகப்படுத்தும் போது, அரசாங்கம் நிச்சயமாக சட்டத்தின் மீது நம்பிக்கை வைக்க வேண்டும். அத்தகைய நம்பிக்கை இல்லாத நிலையில், இவ்வாறான சட்டத்தை அறிமுகப்படுத்த வேண்டிய அவசியம் இல்லை. எனத் தெரிவித்துள்ளார்.

# இலங்கையில் இராணுவத் தளத்தை அமைக்கிறதா அமெரிக்கா?

இலங்கையில் இராணுவத் தளத்தை அமைக்கும் நோக்கம் தமது நாட்டுக்கு இல்லை என அமெரிக்கத் தூதுவர் ஜூலி சுங் தெரிவித்துள்ளார்.



அமெரிக்காவின் உயர்மட்ட பாதுகாப்பு அதிகாரியின் இலங்கை விஜயம் குறித்த கேள்விக்கு பதிலளித்த போதே அவர் இவ்வாறு கூறியுள்ளார்.

இந்தோ-பசிபிக் பாதுகாப்பு விவகாரங்களுக்கான முதன்மை பிரதி பாதுகாப்புச் செயலாளர் ஜெடிடியா ரோயல் தலைமையிலான அமெரிக்க உயர்மட்ட பாதுகாப்புக் குழு பெப்ரவரி மாதம் இலங்கைக்கு வந்திருந்தது.


உயர்மட்ட அமெரிக்க பாதுகாப்பு அதிகாரிகளை உள்ளடக்கிய குறித்த குழு, அமெரிக்க விமானப்படையின் இரண்டு சிறப்பு விமானங்களில் நாட்டை வந்தடைந்தது.

பிராந்திய பாதுகாப்பு, இலங்கை இராணுவத்தில் சீர்திருத்தங்கள், கடல்சார் கள விழிப்புணர்வு நடவடிக்கை தொடர்பான விவகாரங்கள் குறித்து கலந்துரையாடுவதற்காக இக்குழு இலங்கைக்கு வந்திருந்தது. இந்த விஜயம் இலங்கையில் ஒரு இராணுவ தளத்தை அமைக்க அமெரிக்கா நடவடிக்கை எடுக்கும் என்ற ஊகத்தை தூண்டியது.

இந்நிலையில் நேற்று இந்த விடயம் தொடர்பாக கருத்து வெளியிட்டிருந்த அமெரிக்கத் தூதுவர் ஜூலி சுங், இலங்கையில் இராணுவத் தளத்தை அமைக்கும் நோக்கம் தமது நாட்டுக்கு இல்லை என கூறியுள்ளார்.

அத்துடன், சோஃபா ஒப்பந்தத்தை புதுப்பிக்கவோ அல்லது மீள் மதிப்பீடு செய்யவோ அமெரிக்கா எந்த முடிவும் எடுக்கவில்லை என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

# புதிய பயங்கரவாத எதிர்ப்பு சட்டம் சர்வதேச தராதரங்களிந்கு ஏற்றதாக காணப்படவேண்டும்




புதிய பயங்கரவாத எதிர்ப்பு சட்டம் சர்வதேச தராதங்களை பூர்த்தி செய்வதாக காணப்படவேண்டும் என இலங்கைக்கான அமெரிக்க தூதுவர் ஜூலி சங் தெரிவித்துள்ளார்.

காலவாதியாகிப்போன சட்டமான பயங்கரவாத தடைச்சட்டத்திற்கு பதிலான பயங்கரவாத எதிர்ப்பு சட்;டம் குறித்த புதிய கலந்துரையாடல்கள் இடம்பெறுகின்றன என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

பழையபயங்கரவாத தடைச்சட்டத்தை மாற்றியமைத்து அதனை நீக்கப்போவதாக ஜனாதிபதியும் அரசாங்கமும் வெளியிட்டுள்ள கருத்துக்களை நாங்கள் வரவேற்கின்றோம் எனவும் அமெரிக்க தூதுவர்தெரிவித்துள்ளார்.

இந்த சட்டத்தை மீளாய்விற்கு உட்படுத்தும் போது அனைத்து பங்குதாரர்களுடனும் நேர்மையான வலுவான கலந்தாலோசனைகள் இடம்பெறும் என எதிர்பார்க்கின்றோம் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

இதுமிகப்பெரும் தாக்கத்தை ஏற்படுத்தும் ஏனெனில் இது அவ்வாறான சட்டம் எனவும் ஜூலி சங் குறிப்பிட்டுள்ளார்.

இது இலங்கையின் வரலாற்றில் மிக முக்கியமான தருணம் ஆகவே அரசாங்கம் பல்வேறுதரப்பட்ட பங்குதாரர்களின் கருத்துக்களை செவிமடுப்பதற்கு நேரத்தை செலவிடும் என நாங்கள் கருதுகின்றோம், எனவும் தெரிவித்துள்ள அவர் புதிய பயங்கரவாத எதிர்ப்பு சட்டம் சர்வதேச தராதரங்களை பூர்த்தி செய்வதாகவும் இலங்கை மக்களின் தேவைகளை உண்மையில் பூர்த்தி செய்வதாகவும் காணப்படவேண்டும் எனவும் இலங்கைக்கான அமெரிக்க தூதுவர் தெரிவித்துள்ளார்.

# எல்லை நிர்ணய குழுவின் புதிய அறிக்கை பிரதமரிடம் கையளிப்பு

எல்லை நிர்ணய குழுவின் புதிய அறிக்கை நேற்று செவ்வாய்கிழமை காலை பிரதமர் தினேஷ் குணவர்தனவிடம் கையளிக்கப்பட்டது.

எல்லை நிர்ணய குழுவின் தலைவர் மஹிந்த தேசப்பிரியவினால் இந்த அறிக்கை பிரதமரிடம் கையளிக்கப்பட்டது.

உள்ளூராட்சி அமைப்புகளுக்கான தொகுதிகள் நிர்ணயம் செய்வதற்காக ஐந்து பேர் கொண்ட தேசிய எல்லை நிர்ணயக் ஆணைக்குழு நவம்பர் 2022 இல் நியமிக்கப்பட்டது.

ஆர்.வி. திஸாநாயக்க, டபிள்யூ. எம்.எம்.ஆர். அதிகாரி, கே.தவலிங்கம் மற்றும் ஐ.ஏ. ஹமீட் உள்ளடங்கலாக தேர்தல் ஆணைக் குழுவின் முன்னாள் தலைவர் மஹிந்த தேசப்பிரிய தலைமையில் இக்குழு அமைக்கப்பட்டது.

இந்நிலையில் பொது நிர்வாகம், உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சர் என்ற வகையில் பிரதமர் தினேஷ் குணவர்தனவிடம் குறித்த அறிக்கை இன்று கையளிக்கப்பட்டுள்ளது.

புதிய எல்லை நிர்ணயத்தின் மூலம் எண்ணாயிரத்திற்கும் மேற்பட்ட உள்ளூராட்சி மன்ற உறுப்பினர்களின் எண்ணிக்கை நான்காயிரம் என்ற எல்லைக்கு கொண்டு வரப்பட்டுள்ளதாக குறிப்பிடப்படுகின்றது.



# தமிழர் மண்ணில் மறைமுகமாய் ஆட்டம் போடும் ரணில்

புனிதப்பிரியா பன்னீர்செல்வம்

மனிதன் தான் வாழும் நிலத்திற்கும் மனிதனுக்கும் இடையிலான உறவென்பது அவனது அகப்புற வாழ்வுடன் பின்னிப் பிணைந்தது. ஒரு இனக்குழுமத்திற்கு தாம் பூர்வீகமாய் வாழ்ந்து வரும் நிலத்துடன் உள்ள தொடர்பானது வாழ்வுடன் பிரிக்க முடியாத பிணைப்பைக் கொண்டுள்ளது. தமிழர்களின் மரபுவழித் தாயகக் கோட்பாட்டை சிதைத்து இலங்கை கௌதம புத்தரால் சிங்களவர்களுக்கு அர்ப்பணிக்கபட்ட பூமி என்ற மகாவம்ச மாயாவாத சித்தாந்தத்தை நிலைநாட்டுவதற்காக இலங்கை முழுவதையும் சிங்களமயமாக்குதலை நோக்காகக் கொண்டு தமிழர் பாரம்பரிய நிலத்தில் அத்துமீறிய சிங்களக் குடியேற்றங்களை பேரினவாத அரசாங்கம் 1949 முதல் இன்று வரை குடியமர்த்தி வருகின்றது. தமிழர் தாயகத்தில் வடொ கிழக்கு பகுதியில் ஆக்கிரமிப்புக்கள் குடியேற்றங்கள் முந்தைய ஆட்சியாளர்கள்; இருந்த காலத்தை விட ரணிலின் ஆட்சியில் அதிகரித்து காணப்படுகின்றது. தொல்பொருள் திணைக்களம் வனவளத் திணைக்களம் மகாவலி அபிவிருத்தி அதிகார சபை ஊடாக இராணுவம் பின்புலமாக இருந்து ஆக்கிரமிப்புக்களை செய்து வருகின்றது இவை கண்டிக்கத்தக்க ஒரு விடயமாகும்.

காலம் காலமாக வட, கிழக்கு மாகாணங்களில் தமிழர்களின் குடிப்பரம்பலை மாற்றியமைக்கும் நோக்கோடு பல சிங்களக் குடியேற்றங்கள் மேற்கொள்ளப்பட்டு வந்துள்ளதுடன் தமிழர்களின் மரபுரிமையை சிதைக்கும் நோக்குடன் திட்டமிட்ட பௌத்த மயமாக்கல் செயற்பாடுகளும் மத்திய அரச நிறுவனங்களின் பூரண அனுசரணையுடன் இடம்பெற்று வருவதும் இச்செயற்பாடுகளுக்கெதிராக தமிழ்மக்கள் போராடுவதும் வழமையான நிகழ்வுகளாகிப் போய்விட்டன. அந்தவகையில் ரணில் விக்கிரமசிங்க தனது 8 மாத கால ஆட்சியில் தமிழர் பகுதியில் ஏற்படுத்திய தமிழர் விரோத செயற்பாடுகள் அநேகம். அதன்படி குருந்தூர்மலை ஆதி சிவன் கோவிலில் விகாரை கட்டி முடிக்கப்பட்டு இருக்கின்றது முல்லைத்தீவு மணற்கேணியில் தொன்மையான சைவ கோவில் அழிக்கப்பட்டு இருக்கின்றது திருகோணமலை ராஜவந்தான் மலை கோவில் விக்கிரகங்கள் தோண்டியெறிப்பட்டு விகாரை அமைக்கப்பட்டு வருகின்றது நெடுந்தீவு வெடியரசன் கோட்டை பௌத்த தொல்லியலாக அறிவிக்கப்பட்டு இருக்கின்றது கன்னியா வெந்நீரூற்று அனுராதபுர கால தொல்லியல் என குறிப்பிடப்பட்டு ஆக்கிரமிக்கப்பட்டு இருக்கின்றது. திருக்கோணேஸ்வரம் ஆலயம் 18 ஏக்கர் காணிக்குள் சுருக்கப்பட்டு இருக்கின்றது. மாதுறு ஓயா அபிவிருத்தி திட்டத்தின் கீழ் மயிலத்தமடு மேய்ச்சல் தரை ஆக்கிரமிக்கப்பட்டு இருக்கின்றது. நொச்சியடி ஐயனார் ஆலய சு10ழல் தொல்பொருள் திணைக்களத்தின் அதிகாரத்தின் கீழ் கொண்டு வரப்பட்டு இருக்கின்றது. வவுனியா இராஜேந்திரகுளம் மற்றும் சு10ழ உள்ள பகுதிகளை தொல்பொருட் திணைக்களத்தின் கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வரப்பட்டு இருக்கின்றது. பாரம்பரிய மீன்பிடிக்கு ஏற்ற கடற்கரைகள் எல்லாம் கடலட்டை பண்ணைகள் என்கிற பெயரில் தொடர்ச்சியாக அபகரிக்கப்பட்டு இருக்கின்றது. மணலாற்றின் கற்தூண் அக்கரைவெளி வண்ணாமடு மணற்கேணி ஆகிய பகுதிகளிலேயே காணி அபகரிப்பு மற்றும் பௌத்தமயமாக்கல் என்பன நாள் தோறும் நடந்து வருகின்றன. மூதூர் கடற்கரைசேனை பகுதியில் பரக்கும்பர கடற்படைதளத்தினால் அபகரிக்கப்பட்ட 18 ஏக்கர் காணிகளின் உரிமையாளர்கள் 10 பேரை நான்காம் மாடிக்கு அழைத்து அச்சுறுத்தி இருக்கின்றார்கள். நாவற்குழி ஸ்ரீ சமித்தீ சுமண விகாரையில் புதிய கலசம் அமைக்கப்பட்டு திறந்து வைக்கப்பட்டு இருக்கின்றது.

மேற்குறிப்பிட்ட நல்லிணக்க முயற்சிகளின் தொடர்ச்சியாகொ நிலாவரை கிணற்றுக்கு அருகில் பௌத்த அடையாளச் சின்னங்களை நிறுவ முயற்சிக்கின்றார்கள். இந்திய மீனவர்களுக்கு வடக்கு கடலில் அனுமதி அளிக்க முயற்சிக்கின்றார்கள். மட்டக்களப்பு போரதீவுப்பற்று பிரதேச செயலர் பிரிவில் 26 இடங்களை தொல்லியல்சார் இடங்களாக அறிவித்து சுவீகரிக்க முயற்சிக்கின்றார்கள். 9942 மக்களின் வாழ்வாதாரமான வலதுகரை காணிகளை மட்டக்களப்பில் அபகரிக்க பார்க்கின்றார்கள். சங்கானை மத்திய கலாச்சார நிலையத்தை தொல்பொருள் சிதைவுகள் என்கிற பெயரில் ஊடக ஆக்கிரமிக்க எத்தனிக்கின்றார்கள். வட்டுவாகல் கோத்தபாய கடற்படை முகாம் காணிகளை நிரந்தரமாக அபகரிக்க முயற்சிகின்றார்கள். யாழ்ப்பாணத்தில் 68 இடஙக்ளில் இராணுவத்திற்காக நிலங்களை நிரந்தரமாக அபகரிக்க முயலுகின்றார்கள். தமிழர்களிடமிருந்து நிலப் பகுதியை குறைக்க வேண்டும் என்பதில் தென்னிலங்கை பாரிய திட்டத்தை அரங்கேற்றி வருகிறது. இவ்வாறான திட்டங்கள் நிலமற்ற சிங்களவர்களுக்கு நிலம் தரும் திட்டங்களாக அரசால் பரப்புரை செய்யப்பட்டாலும் காலங்காலமாக அப்பிரதேசங்களிலேயே வாழ்ந்துவரும் தமிழர்களின் உரிமைகளை கருத்துகளைப் பொருட்படுத்துவதேயில்லை என்பதுதான் இதிலுள்ள பெரும் குறையாகும். இலங்கையின் இனப்பிரச்சினைக்கு ஒரு முக்கிய காரணமாக அமைந்தது பெரும்பான்மை மக்களின் பலவந்தமான குடியேற்றங்களே! இருந்தாலும் இதனை ஏற்றுக் கொள்வதற்கு அரசாங்கங்கள் தயாரில்லை என்பதே கசப்பான உண்மை. இலங்கை ஒரு ஜனநாயக நாடு. ஆனால் அந்த ஜனநாயகத்தை தான் நாட்டில் தமிழ் மக்கள் இத்தனை வருட காலமாக தேடி வருகின்றனர். அத்துடன் பேரினவாத அரசு இலங்கையில் தமிழ் மக்களின் நிலங்கள் சிங்களமயமாக்கப்படுவதையும் ஆக்கிரமிக்கப்படுவதையும் தடுக்க எந்தவிதமான நடவடிக்கையையும் எடுப்பதில்லை. அதற்கு ஆதரவு வழங்கி அவர்களை ஊக்கப்படுத்தி வரப்பிரசாதங்களையும் வழங்குவதே தமிழ் மக்களை கவலைக்குள் தள்ளிவிடுகிறது. இலங்கையில் உள்நாட்டுப் போர் முடிந்து பல வருடங்கள் ஆகியும் இன்னமும் பெரும்பான்மை மக்களுக்கு சாதகமானதாகவே அரசு செயற்படுவதை குறித்து பல சந்தர்ப்பங்களிலும் பிரஸ்தாபிக்கப்பட்டாலும் இதுவரை எந்தவித பயனும் தமிழ் மக்களுக்கு கிடைக்கப்பெறவில்லை.

வடக்கையும் கிழக்கையும் புவியியல் ரீதியாகப் பிரிக்கும் அரசாங்கத்தின் திட்டத்தின் அமைவாகவே மகாவலி திட்டத்தின் கீழ் வழங்கப்பட்ட சுமார் பத்து லட்சம் காணிகளில் தமிழர்கள் எவருக்கும் ஒரு துண்டு காணியேனும் வழங்கப்படவில்லை. மகாவலிடு வலயத்தில் உள்ளடங்கும் முல்லைத்தீவு மாவட்டம் வெலிஓயா பகுதியில் முழுதாக சிங்கள மக்களுக்கே குடியேற்ற திட்டம் வழங்கப்பட்டுள்ளது. யாழ். மாவட்டத்தில் 14 ஆயிரம் பேர் காணியற்றவர்களாக பதிவு செய்யப்பட்டுள்ள நிலையில் அவர்களுக்கு இன்னும் காணிகள் வழங்கப்படவில்லை. இவ்வாறு தமிழர் புராதன காணிகளை அபகரிப்பதில் தொல்லியல் திணைக்களம் வனவளத் திணைக்களம் மற்றும் வன ஜீவராசிகள் திணைக்களம் என்பன மிக வேகமாகச் செயற்படுகின்றன. அதேவேளை மகாவலி அதிகார சபைக்கு வழங்கப்பட்ட அதிகாரத்தின் பிரகாரம் பிரதேச செயலகமோ மாவட்ட செயலகமோ கேள்வி கேட்க முடியாத அளவுக்கு அதிகாரம் உள்ள சபையாக காணப்படுகிறது. இவ்வாறான செயற்பாடுகள் மூலம் தமிழ் மக்களின் பூர்வீக விவசாய நிலங்கள் தரவைகள் வழிபாட்டு இடங்களை எல்லாம் தொல்லியல் வன ஒதுக்கப் பகுதி என கையகப்படுத்தி தமிழரை காணி அற்றவர்களாக்குவதே இந்த சிறிலங்கா அரசாங்கத்தின் திட்டம்.

இலங்கையில் பல தசாப்தங்களாக இடம்பெற்ற யுத்த காலப்பகுதியில் கூட தமிழர்களுடைய புராதன அடையாளங்கள் மற்றும் வரலாற்று நிலங்கள் பாதுகாக்கப்பட்ட நிலையில் தற்போது போர் மௌனிக்கப்பட்ட நிலையில் தமிழர் அடையாளங்களை அழித்து தமிழரின் இருப்பை இல்லாது செய்யும் நோக்குடன் ஆட்சியாளர்கள் செயற்பட்டு வருகின்றனர். அதேவேளை இந்து சமயம் பல்வேறு வழிகளிலும் நசுக்கப்பட்டு வரும் நிலையில் தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்கள் பேசுவதற்கு தயக்கம் காட்டுகின்றனர். ஆனால் மட்டக்களப்பை பிரதிநிதித்துவப்படுத்திய முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் யோகேஸ்வரன் நாடாளுமன்றத்தில் இருக்கும்போது இந்து ஆலயங்கள் தொடர்பில் அதிகம் பேசுவார். இந்து சமயத்தில் இருக்கின்ற பல்வேறு அமைப்புகள் ஒன்றிணைந்து வலுவான ஒரு அமைப்பின் கீழ் செயல்படும்போது தமிழ் மக்களின் நிலங்களையும் இந்து சமயத்தையும் பாதுகாக்க முடியும் எனவும் அவர் தொடர்ந்தும் கருத்துக்களைத் தெரிவித்து வந்தார். ஆனால் இன்று உள்ள நாடாளுமன்ற உறுப்பினர்கள் தமிழர் பூர்வீகம் அழிக்கப்பட்டு சிதைக்கப்பட்டு வரும் நிலையிலும் வாய் மூடி மௌனிகளாகவே இருக்கின்றனர். 2009 யுத்தத்தின் இறுதியில் நடந்தவற்றை விசாரணை செய்யக் கோரும் சர்வதேசம் இலங்கை அரசு தனது நாட்டு மக்கள் மீது புரிந்த இனப் படுகொலை குறித்து மௌனம் சாதிக்கிறது. 1984 காலப் பகுதியில் மணலாற்றில் நடைபெற்ற தமிழினப் படுகொலைகளுக்கோ பின்னர் நடந்த தமிழினப் படுகொலைக்கோ இலங்கையில் இதுவரை விசாரணை நடத்தப்படவும் இல்லை நீதி வழங்கப்படவும் இல்லை. ஆனால் தமிழினத்தை தமிழ் மக்களின் நிலத்தைப் இன அழிப்பிலிருந்து பாதுகாக்க ஆயுதமேந்திய தமிழ் இளைஞர்களை விடுதலைப்புலிகளை பயங்கரவாதிகள் என்று கூறி இலங்கையரசாங்கத்துடன் இணைந்து அழித்த கொடுஞ்செயலுக்கு சர்வதேசமும் சிங்கள பேரினவாத அரசிற்கு துணை நின்றது. இவ் எல்லா ஆக்கிரமிப்பு திட்டங்களையும் உள்ளடக்கியதான திட்டத்திற்கு நம் வடொ கிழக்கு தமிழ் அரசியல்வாதிகள் துணை போய் விட்டார்கள். உண்மையிலேயே ஆட்சியைத் தக்க வைத்துள்ள அரசின் தமிழர் விரோத செயற்பாடுகள் தொடர்ந்து நடைபெறுகின்ற போது தமிழ் பாராளுமன்ற உறுப்பினர்கள் தட்டிக்கேட்டு தடுத்து நிறுத்த முடியாது தடுமாறுவது தமிழினத்தின் சாபக்கேடு.

“தமிழினத்தை தமிழ் மக்களின் நிலத்தைப் இன அழிப்பிலிருந்து பாதுகாக்க ஆயுதமேந்திய தமிழ் இளைஞர்களை விடுதலைப்புலிகளை பயங்கரவாதிகள் என்று கூறி இலங்கையரசாங்கத்துடன் இணைந்து அழித்த கொடுஞ்செயலுக்கு சர்வதேசமும் சிங்கள பேரினவாத அரசிற்கு துணை நின்றது. இவ் எல்லா ஆக்கிரமிப்பு திட்டங்களையும் உள்ளடக்கியதான திட்டத்திற்கு நம் வடொ கிழக்கு தமிழ் அரசியல்வாதிகள் துணை போய்விட்டார்கள். உண்மையிலேயே ஆட்சியைத் தக்க வைத்துள்ள அரசின் தமிழர் விரோத செயற்பாடுகள் தொடர்ந்து நடைபெறுகின்ற போது தமிழ் பாராளுமன்ற உறுப்பினர்கள் தட்டிக்கேட்டு தடுத்து நிறுத்த முடியாது தடுமாறுவது தமிழினத்தின் சாபக்கேடு.”



# ரணில் ஏன் இப்படிச் செய்கிறார்?



நிலாந்தன்

வெடுக்குநாறி மலையில் சிவனாலயம் சிதைக்கப்பட்டமை, கன்னியா வெந்நீர் ஊற்று விவகாரம்,கச்சதீவில் புத்தர் சிலை, நெடுந்தீவில் வெடியரசன் கோட்டை விவகாரம்,புல்மோட்டையில் முஸ்லிம்களின் பிரதேசத்தில் புத்தபிக்குவின் அட்டகாசம், இவற்றோடு பயங்கரவாதத் தடைச் சட்டத்தை புதிய வடிவத்தில் புதுப்பிக்க முற்படுவது போன்ற அனைத்தும் எப்படிப்பட்ட ஒரு காலகட்டத்தில் நிகழ்கின்றன?

முதலாவதாக,ஜெனிவா கூட்டத்தொடர் நடந்து கொண்டிருக்கும் ஒரு காலகட்டம். கடந்த நான்காம் திகதிதான் ஜெனிவாகூட்டத்தொடர் முடிவுக்கு வந்தது.இரண்டாவதாக, இரண்டு முக்கிய அமைச்சர்கள் தென்னாபிரிக்காவுக்கு போய் வந்த ஒரு காலகட்டம். அந்நாட்டின் நல்லிணக்க அனுபவங்களை கற்றுக் கொள்வதே அந்த விஜயத்தின் நோக்கம்.அதன்பின் இந்த வாரம் உண்மை மற்றும் நல்லிணக்கத்திற்கான ஆணைக்குழுவுக்கான சட்டமூலம் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டிருக்கிறது. மூன்றாவது,ஐ.எம்.எஃப்பின் உதவி உறுதி செய்யப்பட்ட ஒரு காலகட்டம்.

தொகுத்துப் பார்த்தால்இப்படிப்பட்ட ஒரு காலகட்டத்தில் அரசாங்கம் அதிகம் அடக்கி வாசிக்க வேண்டும். குறிப்பாக மேற்கத்திய நாடுகளுக்கு நல்ல பிள்ளை வேடம் போட வேண்டும். ஆனால் நடப்பு நிலைமைகளைத் தொகுத்துப் பார்த்தால்,அரசாங்கம் தலைகீழாக நடக்கின்றது. ஏன் அப்படி நடந்து கொள்கிறது?

அதற்கு பின்வரும் காரணங்களைக் கூறலாம். முதலாவது காரணம் ஐஎம்எஃபின் நிபந்தனைகளுக்கு பணிந்து மானியங்களை வெட்டும்போது அல்லது பொது நிறுவனங்களை தனியாரிடம் கொடுக்கும் பொழுது அதனால் ஏற்படக்கூடிய சிங்களப் பொது மக்களின் கோபத்தைத் திசை திருப்புவது. இரண்டாவது காரணம் உதவி வழங்கும் நாடுகளும் நிறுவனங்களும் அந்த உதவியை



இனப்பிரச்சினையைத் தீர்க்கவேண்டும் என்ற முன்நிபந்தனையோடு பிணைத்திருக்கவில்லை என்பது.மூன்றாவது காரணம் தன்னைவிட்டால் வேறு தெரிவு உலகசமூகத்திடம் இல்லை என்று ரணில் விக்கிரமசிங்க திடமாக நம்புகிறார்.

இந்த மூன்று காரணங்களின் அடிப்படையில்தான் அண்மை வாரங்களாக அரசாங்கம் தமிழ் மக்களுக்கு கோபமூட்டும் நடவடிக்கைகளைத் தொடர்ச்சியாக முன்னெடுத்து வருகின்றது.இதைச் சற்று விரிவாகப் பார்க்கலாம்.

ஐஎம்எஃபின் நிபந்தனைகளை ஏற்று மானியங்களை வெட்டும்போது ஏழைகள் கொதித்து எழுவார்கள்.பொதுச்சேவை நிறுவனங்களைத் தனியார் மயப்படுத்தும்போது தொழிலாளர்கள் கொதித்து எழுவார்கள். அதிகம் சம்பாதிப்பவர்களுக்கு வருமான வரி விதிக்கும்போது அவர்கள் ஆர்ப்பாட்டம் செய்வார்கள்.ஏற்கனவே இம்மூன்று தரப்புக்களும் கொதித்துக்கொண்டிருக்கின்றன. அவர்களுடைய நடவடிக்கைகளைத் திசை திருப்புவதற்கு அரசாங்கம் இனவிவகாரத்தை கையில் எடுத்திருக்கிறது. அதன்மூலம் சாதாரண சிங்களமக்களின் கவனத்தை எளிதாகத் திசை திருப்பலாம்.

இது ஒரு புதிய உத்தி அல்ல.ஏற்கனவே முன்னம் இருந்த எல்லா அரசாங்கங்களும் கையாண்ட ஓர் உத்திதான்.தென்னிலங்கையில் நெருக்கடி தோன்றும் போது இனவாதத்தை நோக்கி அவர்களுடைய கவனத்தைத் திசை திருப்புவது.தமிழ்மக்கள் பௌத்தமயமாக்கலை எதிர்க்கிறார்கள் அதற்கு எதிராக போராடுகிறார்கள் என்று காட்டினால், சிங்கள மக்களின் கோபம் திசை திருப்பப்பட்டுவிடும்.

இது ஒரு காரணம்.அடுத்த காரணம்,அரசாங்கத்தை பொருளாதார நெருக்கடியில் இருந்து பிணையெடுக்க முற்படும் தரப்புக்கள் தமது உதவிகளுக்கு இனப்பிரச்சினைக்கான தீர்வை ஒரு நிபந்தனையாக முன்வைக்கவில்லை என்று தெரிகிறது.

அவ்வாறு முன்வைத்திருந்திருந்தால் அரசாங்கம் ஜெனிவாக் கூட்டத்தொடர் நடந்து கொண்டிருந்த ஒரு காலகட்டத்தில் இவ்வாறு சிங்களபௌத்த மயமாக்கலை முடுக்கி விட்டிருக்காது.பொருளாதார நெருக்கடியில் இருந்து அரசாங்கத்தைப் பிணையெடுக்க முற்படும் வெளித்தரப்புக்கள் குறிப்பாக மேற்குநாடுகளும் இந்தியாவும் ஒரு விடயத்தில் ஒரே விதமாகச் சிந்திக்கின்றன. இப்போதுள்ள நிலைமைகளின்படி ஜேவிபி படிப்படியாக வளர்ந்து வருவதாகக் கருதப்படுகிறது.இடது பண்புடைய ஒரு கட்சி குறைந்தபட்சம் பலமான எதிர்கட்சியாக மேலெழுவதைக்கூட,மேற்படி நாடுகள் விரும்பாது.எனவே ஜேவிபியின் எழுச்சியைத் தடுப்பதற்கு ரணிலைப் பலப்படுத்த வேண்டும்.அதனால் நிபந்தனைகளைப் போட்டு அவரைப் பலவீனப்படுத்த மேற்கு நாடுகள் தயாரில்லை.

அதாவது ஜே.வி.பிதான் இப்பொழுது ரணிலுடைய பலம்.எப்படியென்றால் ஜேவிபி மற்றும் ஜேவிபியிலிருந்து பிரிந்து சென்ற முன்னிலை சோசலிஸக் கட்சி போன்றன முன்னெடுத்த அரகலய போராட்டத்தின் விளைவாகவே ரணிலுக்கு பதவி கிடைத்தது.இப்பொழுது ஜேவிபி பலமடைவதைத் தடுப்பதற்கு ரணிலைப் பலப்படுத்த வேண்டிய தேவை மேற்கு நாடுகளுக்கும்

09 ஆம் பக்கத்தில் மிகுதி ...

ஜே.வி.பிதான் இப்பொழுது ரணிலுடைய பலம்.எப்படியென்றால் ஜேவிபி மற்றும் ஜேவிபியிலிருந்து பிரிந்து சென்ற முன்னிலை சோசலிஸக் கட்சி போன்றன முன்னெடுத்த அரகலய போராட்டத்தின் விளைவாகவே ரணிலுக்கு பதவி கிடைத்தது.இப்பொழுது ஜேவிபி பலமடைவதைத் தடுப்பதற்கு ரணிலைப் பலப்படுத்த வேண்டிய தேவை மேற்கு நாடுகளுக்கும் மேற்கத்திய நிதிமுகவர் அமைப்புகளுக்கும் இந்தியாவுக்கும் ஏற்பட்டிருக்கிறது.ஜே.வி.பி. அச்சுறுத்தலான ஒரு சக்தியாக இருக்கும்வரை அவர்கள் ரணிலைப் பலப்படுத்துவார்கள்.

# ரணில் ஏன் இப்படிச் செய்கிறார்?







மேற்கத்திய நிதிமுகவர் அமைப்புகளுக்கும் இந்தியாவுக்கும் ஏற்பட்டிருக்கிறது.ஜேவிபி அச்சுறுத்தலான ஒரு சக்தியாக இருக்கும்வரை அவர்கள் ரணிலைப் பலப்படுத்துவார்கள்.

ஒவ்வொரு வெளிநாட்டுக்கும் அதன தன்பயம்.இதில் தமிழ்மக்களின் பயத்தை யார் பொருட்படுத்துகிறார்கள்?நாட்டின் பொருளாதார நெருக்கடியை இனப்பிரச்சினையைத் தீர்ப்பதற்கான ஒரு வாய்ப்பாக பயன்படுத்த வேண்டும் என்று தமிழ் மக்கள் கேட்கக்கூடும்.ஆனால் பிராந்தியப் பேரரசுகளும் உலகப் பேரரசுகளும் அதனை தமக்குக் கிடைத்த ஒரு ராஜதந்திர வாய்ப்பாகக் கருதிக் கையாள்வதாகத் தெரிகிறது.இலங்கை நொடிந்து போயிருக்கும் காலகட்டத்தில் உதவிகளின்மூலம் இலங்கையை எப்படித் தம்வசப்படுத்தலாம் என்றுதான் எல்லாப் பேரரசுகளும் சிந்திக்கின்றன. ஏற்கனவே சீனாவின் கடன் பொறிக்குட் சிக்கியிருக்கும் ஒரு நாட்டை எப்படி ஐஎம்எப்பின் கடன்பொறிக்குள் வீழ்த்துவது என்று மேற்குநாடுகள் சிந்திக்கின்றன.இப்படியாக பேரரசுகள் இலங்கைத் தீவின் பொருளாதார நெருக்கடியை ஒரு ராஜதந்திர வாய்ப்பாக பயன்படுத்த தொடங்கினால்,உதவிகளையும் இனப் பிரச்சனைக்கான தீர்வையும் ஒன்றுடன் ஒன்று பிணைப்பதற்கான வாய்ப்புகள் மேலும் பலவீனமடையும்.

மேலும்,ரணில் மேற்கத்தியப் பாரம்பரியத்தில் வந்த ஒரு தலைவர்.ஐ எம்எஃப் போன்ற நிறுவனங்களை ஏற்கனவே கையாண்டவர்.எனவே ஏற்கனவே பரிச்சயமான ஒருவரோடு விவகாரங்களை கையாள்வது இலகுவானது என்றும் மேற்கு நாடுகளும் ஐ.எம்.எஃப்பும் கருதக்கூடும். அதனால் நாட்டில் இப்போதுள்ள நிலைமைகளில் ஒப்பீட்டளவில் ரணில் பரவாயில்லை என்று மேற்கு நாடுகள் கருதுவதாகத் தெரிகிறது.

அதுமட்டுமல்ல, ராஜபக்சக்களைப் பொறுத்தவரை ரணிலை விட்டால் வேறு பாதுகாப்புக் கவசம் இல்லை. வேறு பொருத்தமான பினாமியும் இல்லை. ராஜபக்சக்கள் உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் மதிப்பிழந்து காணப்படுகிறார்கள்.எனவே அவர்கள் தங்களைப் பலப்படுத்திக் கொள்ளும்வரை குறிப்பாக நாமல் ராஜபக்சவை அடுத்த தலைவராகக் கட்டியெழுப்பும்வரை நிலைமைகளைக் கையாள்வதற்கு ஒப்பீட்டளவில் பொருத்தமான பினாமி ரணில்தான்.இப்படிப்பார்த்தால்,உள்நாட்டில் ராஜபக்சங்களுக்கு பொருத்தமான பினாமி ரணில்தான்.வெளியே மேற்கத்திய நாடுகளுக்கும் ஐஎம்எஃப்பிற்கும்,உலக வங்கிக்கும் ரணில் ஒப்பீட்டளவில் பரவாயில்லை. எனவே உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் தனக்கு இப்பொழுது மவுசு அதிகரித்து வருவதை ரணில் உணர்கிறார். மேலும் கடந்த மாதத்தோடு அவருக்கு நாடாளுமன்றத்தைக் கலைக்கும் அதிகாரமும் கிடைத்துவிட்டது.



எனவே, நிறைவேற்று அதிகாரம்,மேற்கத்திய ஆதரவு,ராஜபக்சக்களின் தங்குநிலை,ஆழங்காண முடியாத தந்திரம்,வாழ்வின் இறுதிக் கட்டத்திலாவது சாதிக்க வேண்டும் என்ற ஆவேசம்போன்ற எல்லாவற்றினதும் கூட்டுக் கலவையாக அவர் காணப்படுகிறார்.

உள்நாட்டில் தனக்கு மக்கள்ஆணை இல்லை என்பதும் தனது கட்சி பெருமளவுக்குச்சிதைந்து போய்விட்டது என்பதும் அவருக்குத் தெரிகிறது. பொருளாதாரத்தை ஒப்பீட்டளவில் நிமிர்த்தினால் தான் தன்னையும் நிமித்தலாம், தனது கட்சியையும் நிமிர்த்தலாம்,சஜித்தையும் உடைக்கலாம் என்று அவருக்குத் தெரியும். பொருளாதாரத்தை நிமிர்த்துவது என்றால் மேற்கு நாடுகளின் நிபந்தனைகளுக்கு ஒத்துப்போக வேண்டும்.மேற்கின் நிபந்தனைகளுக்கு கீழ்ப்படிவதென்றால் உள்நாட்டில் எதிர்ப்புகள் எழும்.அந்த எதிர்ப்பைத் திசைதிருப்ப அவருக்கு இனவாதம் தேவை.அதைத்தான் அவர் செய்கிறார்.அதுவும் ஜெனிவாக கூட்டத் தொடர்காலகட்டத்திலேயே செய்கிறார். ஆனால் தமிழ் மக்களோ அதற்கு எதிராகக் காட்டிய எதிர்ப்பு ஒப்பீட்டளவில் பலவீனமானது.வெடுக்குநாறி மலையில் சிதைக்கப்பட்ட சிவனாலயத்துக்கு நீதி கேட்டுத் திரண்ட மக்கள் தொகையை விடவும் நாவற்குழியில் புதிதாகக் கட்டப்பட்டுள்ள பௌத்த விகாரைக்கு கலசம் வைப்பதற்காக வந்த சிங்கள மக்களின் எண்ணிக்கை அதிகம் என்று யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த ஒரு செய்தியாளர் சொன்னார்.

சிங்களபௌத்த மயமாக்கலுக்கு எதிராக தமிழ்மக்கள் பலமான ஒரு திரட்சியைக் காட்டமுடியாமல் இருக்கிறார்கள். இதுவும் அரசாங்கத்துக்குத் துணிச்சலை கொடுக்கிறது.

ஒருபுறம் தென்னாபிரிக்கப் பாணியில் உண்மை மற்றும் நல்லிணக்கத்திற்கான ஓர் ஆணைக் குழுவை உருவாக்க அரசாங்கம் முயற்சிக்கின்றது. இன்னொருபுறம் ஜெனிவா கூட்டத்தொடர் நடந்து கொண்டிருக்கும் பொழுதே தமிழ் மக்களே கோபப்படுத்துகின்றது.

ஒருபுறம் ஐ.எம். எஃப்பின் நிபந்தனைகளை நிறைவேற்றுகிறது.இன்னொரு புறம் அதற்கு எதிராகக் கிளர்ந்து எழும் சிங்களமக்களைத் தமிழ் மக்களின் மீது திருப்பி விடுகிறது.ஒரு பிரச்சினையை இன்னொரு பிரச்சினையால் அடித்து விடுவது.அல்லது ஒரு புதிய பிரச்சினையை உருவாக்கி அதன் மீது மக்களின் கவனத்தைத் திசைதிருப்புவது. ஆகமொத்தம் ரணில் விக்ரமசிங்க அடுத்த ஜனாதிபதியாக வருவது என்று தீர்மானித்து உழைக்க தொடங்கி விட்டார்.



> ராஜபக்சக்களைப் பொறுத்தவரை ரணிலை விட்டால் வேறு பாதுகாப்புக் கவசம் இல்லை. வேறு பொருத்தமான பினாமியும் இல்லை.ராஜபக்சக்கள் உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் மதிப்பிழந்து காணப்படுகிறார்கள். எனவே அவர்கள் தங்களைப் பலப்படுத்திக் கொள்ளும்வரை குறிப்பாக நாமல் ராஜபக்சவை அடுத்த தலைவராகக் கட்டியெழுப்பும்வரை நிலைமைகளைக் கையாள்வதற்கு ஒப்பீட்டளவில் பொருத்தமான பினாமி ரணில்தான். இப்படிப்பார்த்தால்,உள்நாட்டில் ராஜபக்சங்களுக்கு பொருத்தமான பினாமி ரணில்தான்.

# ராஜதந்திரிகளின் எல்லையை புரிந்துகொள்ளுதல்





யதீந்திரா

ரணில் விக்கிரமசிங்க ஜனாதிபதியாக வந்தது ஒரு ஆச்சரியமென்றால், அடுத்த ஆச்சரியம் அவரது காலநிலை ஆலோசகராக நோர்வேயின் சமாதான ஒருங்கிணைப்பாளர், எரிக் சொல்கெய்ம், நியமிக்கப்பட்டிருப்பதாகும். மீண்டும், சொல்கெய்ம், இலங்கைக்குள் பிரவேசித்திருக்கின்றார். நோர்வேஜிய ராஜதந்திரியும் அரசியல்வாதியுமான எரிக் சொல்கெய்ம், 2000ஆம் ஆண்டு, நோர்வே வெளிவிவகார அமைச்சின் விசேட ஆலோசகராக இணைந்து கொள்வதற்காக, தனது அரசியல் வாழ்விலிருந்து வெளியேறினார். இந்த பின்புலத்தில்தான், இலங்கையின் சமாதா முன்னெடுப்புக்களில் எரிக் சொல்கெய்மின் பிரவேசம் நிகழ்ந்தது. நோர்வேயின் அனுசரனையில் இடம்பெற்ற 2002 - 2005 வரையிலான, சமாதான முன்னெடுப்புக்களில் சொல்கெய்ம் பிரதான செயற்பாட்டாளராக பணியாற்றியிருந்தார். 2005, ஜனாதிபதி தேர்தலில், ரணில் விக்கிரமசிங்க தோற்கடிக்கப்பட்டதை தொடர்ந்து, சொல்கெய்ம், மீளவும் நோர்வேயின் அரசியலுக்கு திரும்பினார்.

2001இல், அமெரிக்க இரட்டைக் கோபுரங்களின் மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதலானது, ஆயுத விடுதலைப் போராட்ட அமைப்புக்களுக்கான சாவுமணியானது. அமெரிக்கா பயங்கரவாதத்தின் மீதான யுத்தத்தை பிரகடணப்படுத்தியது. குறித்த கொள்கையானது, அரசுக்கு வெளியில் நிறுவனமயப்பட்டிருக்கும் ஆயுத அமைப்புக்கள் அனைத்தையும் பயங்கரவாதமென்னும், ஒரு சொல்லின் மூலம், அழிப்பதற்கான வாய்ப்பை அரசுகளுக்கு வழங்கியது. இவ்வாறானதொரு பின்புலத்தில்தான், தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம், நோர்வேயின் சமாதான முன்னெடுப்பு முயற்சிகளுக்கு பச்சை கொடி காண்பித்தது.

2002இல், இடம்பெற்ற பொதுத் தேர்தலில், ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான ஐக்கிய தேசியக் கட்சி, வெற்றிபெற்றதை தொடர்ந்து, சமாதான முன்னெடுப்புக்களை முன்னெடுப்பதற்கான சூழல் கனிந்தது. இத்துடன் இலங்கையின் உள்நாட்டு யுத்தம் முடிவுற்றுவிடுமென்னும் நம்பிக்கையும் மக்கள் மத்தியில் பரவலடைந்தது. எனினும் சமாதான முன்னெடுப்புக்கள் தங்களுக்கான பொறியாக மாறுவதாக கருதிய, விடுதலைப் புலிகள் அமைப்பு, நோர்வேயின் சமாதான முன்னெடுப்புக்களிலிருந்து, வெளியேறுவதற்கான முயற்சிகளில் கவனம் செலுத்தியது.

ரணில் விக்கிரமசிங்கவை தோற்கடித்து, நோர்வேயின் சமாதான முன்னெடுப்பை எதிர்க்கும் மகிந்த ராஜபக்சவை அதிகாரத்திற்கு கொண்டு வருவதன் ஊடாக, இந்தப் பொறியிலிருந்து வெளியேற முடியுமென்று புலிகள் கணக்கிட்டனர். ரணில் விக்கிரமசிங்க அடிப்படையில் ஒரு ஜனவசியமுள்ள சிங்கள தலைவர் அல்ல. ரணில் வெற்றிபெற வேண்டுமென்றால், அவருக்கு தமிழ் முஸ்லிம் மக்களின் ஆதரவு கட்டாயம் தேவை. இந்த விடயத்தை துல்லியமாக கணித்துக் கொண்ட, விடுதலைப் புலிகளின் தலைமை, தமிழ் மக்களின் வாக்குகள், ரணிலுக்கு செல்வதை தடுப்பதன் ஊடாக, அவரை தோற்கடிக்க முடியுமென்று கணக்கிட்டது. அந்தக் கணக்கில் வெற்றியும் பெற்றது. ரணில் விக்கிரமசிங்க தேர்தல் தோல்வியடைந்ததை தொடர்ந்து, நோர்வேயின் சமாதான முன்னெப்புக்களுக்கான கதவும் மூடப்பட்டது. புலிகள் தோற்கடித்தது ரணில் விக்கிரமசிங்கவை மட்டுமல்ல எரிக் சொல்கெய்மையும்தான்.

1987, இந்திய- இலங்கை ஒப்பந்தத்தை ஒரு பொறியாக கருதிய, விடுதலைப் புலிகள் அமைப்பு, அதிலிருந்து வெளியேறுவதற்கான முயற்சியில், பிரேமதாசவுடன் கூட்டுச் சேர்ந்து, இந்திய படைகளை எதிர்த்தது. இந்திய படைகளை வெளியேற்றும் முயற்சியில் வெற்றியும்பெற்றது. அதே உக்தியைத்தான் இங்கும் பயன்படுத்தியது. நோர்வேயின் சமாதான முன்னெடுப்புக்களிலிருந்து வெளியேறுவதற்காக, மகிந்தராஜபக்சவின் வெற்றியை ஊக்குவித்து, நோர்வேயை வெளியேற்றியது. ஆனால் காலம் பின்னர் கற்றுத்தந்த பாடமோ முற்றிலும் வேறானது. அதாவது, விடுதலைப் புலிகள் மற்றவர்களை வெளியேற்றுவதில் வெற்றிபெற்றுவிட்டதாக எண்ணிய இரண்டு சந்தர்ப்பங்களிலும், உண்மையிலேயே தனிமைப்படுத்தப்பட்டு, அரசியலில் தனித்துவிடப்பட்டது, விடுதலைப் புலிகள் அமைப்பு மட்டுமேயாகும். பிரேமதாச - புலிகள் உடன்பாட்டின் மூலம் புலிகள் இந்தியாவின் அனுதாபத்தை முற்றிலுமாக இழந்துபோயினர். ரணிலை தோற்கடிக்கும் திட்டத்தின் மூலம், மேற்குலகின் அனுதாபத்தை முற்றிலுமாக இழந்து போயினர். இந்த பின்புலத்தில்தான் புலிகள் இயக்கம் முற்றுப்பெற்றது.

சொல்கெய்ம் ரணில் விக்கிரமசிங்கவிற்கு மட்டும் ஆலோசகராக நியமிக்கப்படவில்லை. அவர் தமிழ் நாட்டு முதலமைச்சர் ஸ்டாலினால் உருவாக்கப்பட்டுள்ள காலநிலை பேரவைக்கான ஆலோசகராகவும் இருக்கின்றார். சொல்கெய்மால் எப்படி எதிரும் புதிருமான இரண்டு அரசியல் கூழலில் பணியாற்ற முடிகின்றது. அல்லது எதிரும் புதிருமென்று நாங்கள்தான் தவறாக புரிந்து கொண்டிருக்கின்றோமா - அல்லது, ராஜதந்திரிகளின் எல்லையை எங்களால் சரியாக புரிந்துகொள்ள முடியவில்லையா?

தமிழ்ச் சூழலில், சொல்கெய்ம் தொடர்பில் பலவாறான அப்பிராயங்கள் உண்டு. அவர் தமிழ் மக்களை காப்பாற்ற முயற்சிக்கவில்லையென்றும், இறுதி யுத்தத்தின் போது, நோர்வே காத்திரமான தலையீடுகளை செய்யவில்லையென்று கூறுவோர் இப்போதுமுண்டு. சிங்களவர்கள் மத்தியிலும் சொல்கெய்ம் தொடர்பில் மாறுபட்ட அபிப்பிராயங்களுண்டு. சொல்கெய்மை புலிகளின் ஆதரவாளரென்று கூறும் சிங்கள கடும்போக்காளர்கள் உண்டு. சொல்கெய்ம் போன்ற ராஜதந்திரிகளின் எல்லையை சரியாக புரிந்துகொண்டால், இவ்வாறான வாதங்களுக்கும் விமர்சனங்களுக்கும் அவசியமிருக்காது. யுத்தத்தில் ஈடுபட்ட இரண்டு தரப்புக்களுக்களும் சுமூகமானதொரு சூழலில் பேச்சுவார்த்தையை தொடர்வதற்கு அனுசரனை வழங்குவது மட்டுமே, நோர்வேயின் பணியாக இருந்தது. பிரச்சினையை எவ்வாறு தீர்ப்பதென்பதை சம்பந்தப்பட்ட இரண்டு தரப்புக்களும் பேசித்தான் முடிவு செய்யலாமே தவிர, இதில் நோர்வேக்கு எந்தவொரு இடமுமில்லை.

இரண்டு தரப்பும் இணங்கியதன் மூலம் தான், நோர்வே, இலங்கையின் சமாதான முன்னெடுப்பிற்கு அனுசரனை வழங்க முடிந்தது. இரண்டு தரப்போ அல்லது ஒரு தரப்போ, எப்போது வேண்டுமானாலும் நோர்வேயின் பங்களிப்பை நிராகரிக்க முடியும். அவ்வாறு நிராகரித்தால் அதன் பின்னர் நோர்வேக்கு எந்தவொரு தெரிவும் இல்லை. உண்மையில் சமாதான ஏற்பாடுகளில் பங்குகொள்ளும் நோர்வே போன்ற நாடுகளின் நிலைமை பலவீனமானது. இந்த பின்புலத்தில் நோக்கினால், ரணில் விக்கிரமசிங்கவை தோற்கடிக்கும் முயற்சியில் விடுதலைப் புலிகள் எப்போது ஈடுபட்டனரோ, அப்போதே அனைத்தும் முடிந்துவிட்டது. அதன் பின்னர் இடம்பெற்ற எந்தவொரு விடயத்திற்கும் நோர்வேயையோ, அல்லது சொல்கெய்மையோ குற்றம்சாட்ட முடியாது. ஒரு வேளை ரணில் விக்கிரமசிங்கவோடு விடுதலைப் புலிகள் தொடர்ந்தும் பேச்சுவார்த்தையில் ஈடுபட்டு, அப்போது விடயங்களில் தவறுகள் இடம்பெற்று, ஒரு வேளை அதனை சரிசெய்வதற்கு நோர்வே தவறியிருந்தால், சொல்கெய்மின் மீது, குற்றஞ்சாட்டுவதில் அர்த்தமிருக்க முடியும்.

மகிந்த ராஜபக்சவின் தேர்தல் மேடைகளில் ஒரு விடயம் தெளிவாகவே குறிப்பிடப்பட்டது. அதாவது, சமஸ்டியடிப்படையிலான அரசியல் தீர்வு, சுயநிர்ணயம் எதனையும் தான் ஏற்றுக்கொள்ளப் போவதில்லை, அதே வேளை, ரணில் அரசாங்கம் முன்னெடுத்த விடயங்களை நாம் தொடரமாட்டோம், எமது தலைமையில் சமாதான முன்னெடுப்புக்கள் புதிதாக முன்னெடுக்கப்படும். இவ்வாறு கூறும் மகிந்த ராஜபக்சவின் வெற்றியை புலிகள் விரும்பினார்கள் என்றால் அதன் பொருள் என்ன? இதன் பின்னர் நோர்வே தொடர்பில் விவாதிப்பதற்கு என்னவுண்டு?

எரிக் மட்டுமல்ல, எந்தவொரு நாட்டின் ராஜதந்திரிகளுமே, அவர்களுக்கு வழங்கப்பட்ட பணிகளை மட்டுமே முற்னெடுப்பர். அதுவே அவர்களது கடமையாகும். இந்திய-இலங்கை ஒப்பந்த காலத்தில், இலங்கைக்கான, இந்திய தூதுவராக இருந்த, ஜே.என்.டிக்சித் தொடர்பிலும், தமிழ் சூழலில் மட்டுமல்ல தென்னிலங்கையிலும் பலவாறான அப்பிராயங்கள் உண்டு. டிக்சித், இலங்கைக்கான இந்தியாவின் வைஸ்ராய் போன்று செயற்பட்டதாக சிங்களவர்கள் அவரை விமர்சித்ததுண்டு. உண்மையில் டிக்சித்திற்கு என்ன பணிகள் கொடுக்கப்பட்டனவோ, அதனையே அவர் முன்னெடுத்ததார். அதே போன்று, சொல்கெய்முக்கு என்ன பணிகள் கொடுக்கப்பட்டதோ, அதனையே அவர் முன்னெடுத்தார்.

சொல்கெய்ம், இலங்கையில் செயற்பட்ட காலத்தில் பலருடனும் நல்ல தொடர்பிலிருந்தார். சிங்களவர்கள் மத்தியிலும் தமிழர்கள் மத்தியிலும் அவருக்கு நண்பர்கள் ஏராளம். புலம்பெயர் சூழலில் ஒரு சிலர், அவர் தொடர்பில் குற்றச்சாட்டு;க்களை முன்வைத்தாலும் கூட, கணிசமானவர்கள் அவருடன் நட்பிலிருக்கின்றனர். அவருடன் கலந்துரையாடுகின்றனர். அவரும் சளைக்காமல், அனைவருடனுமே தொடர்புகளை பேணி வருகின்றார். சமாதான உடன்பாட்டு காலத்தில், சொல்கெய்ம், புலிகளின் தத்துவ ஆசிரியராக அறியப்பட்ட அன்ரன் பாலசிங்கத்துடன் நெருக்கமான தொடர்பிலிருந்தார். புலிகள் அமைப்பை பொறுத்தவரையில் மேற்குலக ராஜதந்திரிகளோடு தொடர்புகளை பேணிக் கொள்ளக் கூடிய ஒருவராக பாலசிங்கம் மட்டுமேயிருந்தார். அதன் மூலம், அவர்களது பார்வைகளை பாலசிங்கத்தினால் புரிந்துகொள்ள முடிந்தது. அரசியலில் இயங்குபவர்களுக்கு பரந்தளவிலான ராஜதந்திர தொடர்புகள் அவசியம். இன்றைய சூழலில் சுமந்திரன் அதனை முடிந்தவரையில் பேணுவதாகவே தெரிகின்றது. தனிப்பட்ட உறவுகள் முக்கியமானது. மற்றவர்களை குற்றஞ்சாட்டிக் கொண்டிருப்பதால் எதனையும் நம்மால் அடைய முடியாது. நமது அரசியல் சூழலில் இயங்குவோர் இதனை தெளிவாக புரிந்து கொள்ள அவசியமாகும். சூழ்நிலையை கையாளுவது நம்முடைய பொறுப்பேயன்றி, அது மற்றவர்களுடையதல்ல.



இன்றைய சூழலில் சொல்கெய்ம் போன்ற ஒருவரிடமிருந்து எவ்வாறான நன்மைகளை பெற முடியுமோ, அதனைப் பற்றி மட்டுமே நாம் சிந்திக்க வேண்டும். ஒரு ஆபிரிக்க பழமொழியுண்டு. அதாவது, வானத்தை பார்த்து உமிழ்ந்தால், உங்கள் முகமே அசிங்கமாகும். நம்மில் பலர் அதனைத்தான் ராஜதந்திரமென்று எண்ணிக்கொண்டு, தங்களை தாங்களே அசிங்கப்படுத்திக் கொள்கின்றனர். ராஜந்திரிகளை குற்றஞ்சாட்டுவதை விடுத்து, அவர்களுடனான தனிப்பட்ட உறவுகளை பலப்படுத்தி, அவர்களிடமிருந்து, ஏதேனும் நன்மைகளை பெற முடியுமென்றால், அதற்கு முயற்சிப்பதே, நமது மக்களுக்கு நன்மையானது. இதனை எல்லோராலும் செய்துவிட முடியாது. செய்யக் கூடியவர்களை ஊக்குவிப்பதுதான், மற்றவர்கள் செய்யக் கூடியது.

> தமிழ்ச் சூழலில், சொல்கெய்ம் தொடர்பில் பலவாறான அப்பிராயங்கள் உண்டு. அவர் தமிழ் மக்களை காப்பாற்ற முயற்சிக்கவில்லையென்றும், இறுதி யுத்தத்தின் போது, நோர்வே காத்திரமான தலையீடுகளை செய்யவில்லையென்று கூறுவோர் இப்போதுமுண்டு. சிங்களவர்கள் மத்தியிலும் சொல்கெய்ம் தொடர்பில் மாறுபட்ட அபிப்பிராயங்களுண்டு. சொல்கெய்மை புலிகளின் ஆதரவாளரென்று கூறும் சிங்கள கடும்போக்காளர்கள் உண்டு.